# மதுரை மீனாக்ஷி



# மதுரை மீனுக்ஷி

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

அன்பளிப்பு

PL. கண்ணப்பச் செட்டியார்

கோவை.

[விலைக்கல்ல—விரும்புவர்க்கே]

படங்கள், பிளாக்குகள் தந்துதவிய ஆனந்தவிகடன் காரியாலயத்தார், தருமபுரம் ஆதீனத்தார் இவர்களுக்கு நன்றி.

# முன்னுரை

'பெண்களை, அதிலும் அழகுள்ள இளம் பெண்களைக் கண்டால் மனிதன் மனத்தில் ஒரு விகாரம் எழுகிறதே அதைத் தடுக்க வழியுண்டா ?' என்று ஓர் அன்பர் ஒரு பெரியவரைக் கேட்டார். அப்படித் 'தகாத எண்ணங்கள் தோன்றுகின்றபோது கண்ணை மூடிக்கொள்ளுங்கள்' என்று சொன்னார் பெரியவர். 'ஆம் கண்ணை மூடிக்கொள்ளலாம் கருத்தை மூட முடியுமா? இந்த மனக்குரங்கு விடாப்பிடியால் கண்ட உருவத்தையே பற்றி நின்று எல்லையற்ற இடர் தருமே' என்றார் இளையவர். அதற்கும் சொன்னார் பெரியவர். 'அப்படியானால் பார்க்கின்ற பெண்களை எல்லாம் தாயென நினைத்துக்கொள்ளுங்கள். விகாரம் மறைந்துவிடும்' என்று. ஆம், நல்ல யுக்திதான்.

நான் ஒன்று சொல்வேன். பெண்களைப் பார்க்கும் போதெல்லாம் அவரெல்லாம் நாம் வணங்கும் அம்பிகைகள், நம்மைக் காக்கும் தேவியர், நம்மை வாழ்விக்கும் அன்னையர் என்று எண்ணவேண்டும். இப்படி எண்ணவாவது முயல வேண்டும். அந்த முயற்சியில் முழுவெற்றி கிட்டா விட்டாலும் நாளடைவில் தகாத எண்ணங்கள் விலகி விடும் நம் உள்ளத்திலிருந்து. அத்தகைய முயற்சிக்கு ஊக்கம் அளிக்கவே அன்னை மீனாக்ஷியை நடுநாயகமாக வைத்து ஒன்பது அம்பிகைகளைப் பற்றி, அன்னையரைப் பற்றி விளக்கம் எழுதப்பட்டிருக்கிறது இந்தச் சிறுநூலில். ஆண்கள் மாத்திரம் அல்ல, பெண்களும் படித்துப் பயன் பெறவேண்டும். அன்னை மூலமாக அத்தனையும் தெரிந்து கொள்ள இச்சிறுநூல் உதவலாம் அல்லவா! இம் முயற்சியில் என்னை ஊக்கிய அன்னை மீனாக்ஷி இருக்கும் திசை நோக்கித் தொழுகின்றேன்.

**தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்**

கரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
    உத்தரியத் தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
    பால் சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைத்து என்னை எடுத்தாண்ட
    அங்கயற் கண் எம்பிராட்டி
அரும்பும் இளநகை போற்றி ஆரண நூபுரம்
    சிலம்பும் அடிகள் போற்றி

—பரஞ்சோதி முனிவர்



# மதுரை மீனுக்ஷி

காதல் எப்படிப் பிறக்கிறது என்பது ஒரு தேவ ரகசியம். மனிதர்களைத் தேவர்களாக்கக் கூடிய சிறந்த உணர்ச்சிகளில் தலை நிற்பது காதல். ஏன்? சொல்லப்போனுல் தேவர்களே இந்தக் காதல் உணர்ச்சி பெற மனிதர்களாகப் பிறக்க வேண்டியிருந்திருக்கிறது. பர்வத ராஜன் புத்திரி பார்வதியை மணக்க பரமசிவன் இந்த உலகுக்கே இறங்கி வந்திருக்கிருர். அயோத்தியில் சக்ரவர்த்தி திருமகனுகவும், துவாரகையில் கண்ணனுகவும் விஷ்ணு அவதரித்ததே முறையே சீதையையும் ருக்மிணியையும் மணக்கத்தானே. ஏன்? நமது தமிழ் நாட்டுக் கடவுள் முருகன் நம்பிராஜனது தினைப் புனத்துக்கு வந்து வேடனுக, விருத்தனுக எல்லாம் வேஷம் போட்டது அந்தக் குறமகள் வள்ளியின் காதலுக்குத்தானே.

இந்தக் கதைகளை எல்லாம் தூக்கி அடிக்கிறது, மதுரையில் அங்கயற்கண்ணியாம் தடாதகையை அந்த அழகன் சோமசுந்தரன் மணந்து கொண்ட கதை. அரசிளங்குமரியை மணக்க வந்த அவன் அன்றுமுதல் மனைவிக்கு அடங்கிய மணவாளனுக இருந்து விடுகிருன் இந்தச் சோமசுந்தரன். மீனுக்ஷி சுந்தரன் இருவரும் அந்த மதுரையிலே கோயில்

கொண்டிருந்தாலும் மக்கள் என்னவோ கோயிலை மீனுக்ஷி அம்மன் கோயில் என்றுதான் கூறுகிறுர் கள். அதனை சுந்தரன்கோயில் என்று சொல்வதில்லை. அத்துணை ஆதிக்கம் மீனுக்ஷிக்கு அங்கே. ஆம், பணக்காரப் பெண்ணை-அதிலும் அரசிளங்குமரியை மணந்து அவள் வீட்டிற்கே குடிவந்தால் மணமகன் அங்கு அடங்கி ஒடுங்கி இருப்பதுதானே இயல்பு.

மதுரை என்றவுடனே அங்கு அன்று நடந்த இரண்டு திருமணம் நமக்கு ஞாபகம் வரும். இரண்டையும் நடத்தி வைத்தவர் அந்த மகாவிஷ்ணுவே தான். ஆனுல் ஒன்றுக் கொன்று எவ்வளவு வித்தியாசம். பாண்டிய நாட்டிலே தனி அரசு செலுத்திய அல்லியை மணக்க அந்த ஆணழகன் அருச்சுனன் என்ன என்ன எல்லாமோ செய்யவேண்டியிருந்தது. அத்தனை செய்தும் அல்லியை அவள் சம்மதம் பெற்றுத் திருமணம் செய்துகொள்ள முடியவில்லை அவனுக்கு. கடைசியில் அந்தக் கள்ளக் கிருஷ்ணன் உதவியினுல் அரண்மனையில் அவள் தூங்குகின்ற சமயம் பார்த்துக் கள்ளத் தாலி கட்டி, அந்தத் தாலி கட்டிய உரிமையினுல்தான் அல்லியின் காதலனுக ஆகிருன் அர்ச்சுனன். ஆனுல் மலயத்துவஜன் மகளாக இதே பாண்டிய நாட்டில் பிறந்த தடாதகை, அரசுக் கட்டிலில் ஏறி, அதன்பின் திக்விஜயம் செய்து ஏனைய அரசர் பெருமக்களை எல்லாம் வென்று, கடைசியில் சோமசுந்தரனைக் கண்டு காதல் கொண்டு அவனையே மணஞ்செய்து கொள்கிறுள். ஆம், எல்லோரையும் வென்றவளையும் வெற்றி கண்டு விடுகிறுன் இந்தச் சுந்தரன். இந்தக் கதையைத்தான் பரஞ்சோதி முனிவர்

# 3

செழியர் பிரான் திருமகளாய்
கலைபயின்று, முடிபுனைந்து
செங்கோ லோச்சி
முழுதுலகும் சயம் கொண்டு
திறைகொண்டு நந்திகண
முனைப்போர் சாய்த்து
தொழுகணவற்கு அணிமண
மாலிகை சூட்டி, தன்
மகுடம் சூட்டி செல்வம்
தழைவுறு தன்னரசளித்த
பெண்ணரசி

என்று பாடிப் பாடி மகிழ்கின்றார்.

*

இந்தப் பெண்ணரசியை அந்த உலகமுழு தாண்ட சுந்தரன் மணந்த வரலாற்றைக் கொஞ்சம் விரிவாகவே தெரிந்து கொள்ளலாம் தானே. மதுரை யம்பதியை நிர்மாணம்செய்தவன் குலசேகர பாண்டி யன் குமாரன் மலையத்துவஜன். அவன் காஞ்சன மாலையை மணம் புரிகிறான். இந்தக் காஞ்சன மாலையோ முத்திய பிறப்பில் வித்யாவதியாக இருந்து கடுந்தவம் இயற்றி அம்மை மீனாக்ஷியையே தன் மகளாகப் பிறந்து வளர வரம்பெற்றவள். அந்த வர பலத்தால் அங்கயங்கண்ணியே மலையத்துவஜனுக் கும் காஞ்சனமாலைக்கும் மகளாகப் பிறக்கிறாள். அவள் பிறப்பில் ஒரு அதிசயம். மும்முலையுடைய பெண்ணாக வளர்கிறாள். இதைக் கண்டு மருகிய தாய்க்கு அசரீரி சொல்லிற்று. 'குழந்தைக்குத் தடா தகை என்று பெயரிடுங்கள். அவள் பருவமடைந்து

அவளை மணக்க வருகின்ற மாப்பிள்ளையைக் கண்ட தும் மூன்றாவது முலை தானாகவே மறையும்' என்று. தடாதகையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்கிறாள். தந்தைக்குப் பின் தானே மகுடஞ்சூடி பாண்டிய நாட்டை அரசு செய்கிறாள். அப்படி அரசு செய்யும் பொழுது ஒரு ஆசை. ஆம். திக்விஜயம் செய்ய வேண்டுமென்று. புறப்பட்ட திக்விஜயத்தில் பிறதேசத்து அரசர்கள் மாத்திரம் அல்ல, திக்கு பாலர்கள் எட்டுப் பேருமே தலை வணங்குகிறார்கள்.

இப்படி வெற்றிமேல் வெற்றியோடு இமயத்தையே அடைகிறாள்; பாகீரதியில் முழுகுகிறாள்; மேருவை வலம் வருகிறாள். கடைசியில் கைலாயத் திற்கே வந்து விடுகிறாள். அங்கு கைலாசபதி, வந் திருக்கும் தடாதகை தனக்கே உரியவள் என்று அறிந்து, சுந்தரரூபத்தோடு பிக்ஷாடனராக அவள் முன் வந்து சேருகிறான். எல்லோரையும் வெற்றி கண்ட பெண்ணரசி இந்தச் சுந்தரன் முன்பு நாணித் தலை குனிகிறாள். மூன்றாவது மார்பகமும் மறைகிறது. அப்போது 'சரி. இவரே நம் கணவர்' என்று அறிந்து கொள்கிறாள். அந்த சுந்தரனும் தடாதகையையின் பின்னாலே மதுராபுரிக்கே வந்து விடுகிறான். சோமசுந்தரனாக மதுரைக்கு வந்தவன் காஞ்சனமாலையின் சம்மதத்தோடு தடாதகையை ஆம்—அங்கயற்கண்ணியைத் தான், பலரும் அறிய மணம் புரிந்துகொள்கிறான். மலயத்துவஜன் ஸ்தானத்தில் மகாவிஷ்ணுவே கன்யாதானம் செய் கிறார்; தாரைவார்த்தே கொடுக்கிறார் தங்கை மீனாக்ஷியைச் சோமசுத்தரனுக்கு. அன்று முதல்

சோமசுந்தரன், தன் மனைவி மூலம் ஸ்ரீதனமாகக் கிடைத்த பாண்டி நாட்டை ஆளும் பாண்டியனு கவே ஆகிவிடுகிருன்.

இந்தத் திருமண வைபவைத்தைதான், இன் றும் சித்திரைத் திருவிழாவாக மதுரையில் மக்கள் கொண்டாடுகிருர்கள். இப்படி நடக்கும் தங்கை யின் திருமணத்திற்கே தந்தப் பல்லக்கு, முத்துக் குடை, தங்கக்குடம் முதலிய சீர்வரிசைகளுடன் அழகர் கோயிலில் இருந்து அந்தக் கள்ள அழகன் சுந்தரராஜன், பன்னிரண்டு மைல் நடந்து வந்து சேருகிருன்.

இப்படி அழகு நிறைந்த அங்கயற்கண்ணியை அழகனுன சுந்தரனுக்கு, கள்ள அழகன் மணம் முடித்து வைக்கும் காட்சியைக் கவிஞர்கள் மட்டு மல்ல, தமிழ் நாட்டுச் சிற்பிகளும் மறக்கவில்லை. திருமணக்கோலத்தில் உள்ள பெண், மாப்பிள்ளை யோடு கன்னிகாதானம் செய்யும் அந்தக் கண்ணனை யுமே உருவாக்கிக் காட்டுகிருர்கள் கல்லுருவில். அண்ணனுக்கும், அருமை நாயகனுக்கும் இடையில் நிற்கிருள் ஆரணங்கு. புதுமணப் பெண்ணிற்கு உரிய அத்தனை நாணமும் அவள் தன் முகத்திலே மட்டு மல்ல, அங்கங்கள் ஒவ்வொன்றிலுமே வந்து புகுந்து கொள்கிறது. சோமசுந்தரனது நீட்டிய வலக்கரத் திலே தங்கை மீனுக்ஷியின் வலக்கரத்தை எடுத்து வைத்து இணைத்து, தனது வலக்கரத்தால் கெண் டியை எடுத்துத் தாரைவார்த்துக் கொடுக்கிருன் அந்த சுந்தரராஜன். நீண்டுயர்ந்த மணி மகுடங்கள் இரண்டு ஆடவர் தலையை அலங்கரிக்க, கொத்தார்

குழலியின் கூந்தலை அழகான ஒரு சிறு கிரீடம் அழகு செய்கிறது.

மூவரும் அணிந்திருக்கும் ஆடையும் அணியும், இது ஒரு பெரிய இடத்துக் கல்யாணந்தான் என்பதைத் தெரிவிக்கிறது. கல்யாண மண்டபம் வெகு அழகாக மேலும் கீழும் விரிந்திருக்கிறது. பிரம்மாவே திருமணத்தை நடத்திவைப்பவராக அமைகிறார். மற்றைய தேவர்கள் எல்லாம் திருமணவிழாவைக் கண்டு களிகூறுகிறார்கள். இத்தனையையும் அழகு ஒழுகும் உயிர்ஓவியமாகத் தீட்டுகிறார் பரஞ்சோதி முனிவர், தனது திருவிளையாடற் புராணத்தில்

அத்தலம்நின்ற மாயோன்
ஆதி செங்கரத்து நங்கை
கைத்தலம் கமலப்போது
பூத்ததோர் காந்தள் ஒப்ப
வைத்தகு மனுவாய் ஓதக்
கரக நீர் மாரி பெய்தான்
தொத்தலர் கண்ணி விண்ணோர்
தொழுதுபூ மாரி பெய்தார்.

என்பது தானே அவர் சொல்லால் உருவாக்கும் சித்திரம். இதையே கல்லால் இழைத்த காவியமாகக் காட்டுகிறான் சிற்பி. இந்தச் சிற்ப வடிவத்தைக் காண விரும்புபவர்கள் நேரே அந்த சோமசுந்தரன் சந்நிதிக்கே செல்லவேணும். இல்லை, வழக்கம் போல் மீனாக்ஷியின் சந்நிதிக்குச் சென்று அவளைத் தொழுது வணங்கி, அவள் தன் அனுமதியும் பெற்று, அதன்பின் வடக்கு நோக்கி வரவேண்டும். வழியில் முக்குறுணிப்பிள்ளையாரையும் வணங்கிய



கல்யாண சுந்தரர் — வேள்விக்குடி

பின், சொக்கலிங்கத்தை வலம் வந்தால் கம்பத்தடி மண்டபம் வந்து சேரலாம். அங்கு காணவேண்டிய சிற்பச்செல்வங்கள் பல இருக்கும். அத்தனையை யும் ஒதுக்கிவிட்டு, கீழக்கோடிக்கே வந்து மேற்கே பார்க்கத்திரும்பினால் தெற்குத் தூணில் கிழக்கே பார்க்க, அண்ணனும் தங்கையும் அவர்களுடன் மாப் பிள்ளை சுந்தரனுமே திருமணக் கோலத்தில் காட்சி கொடுப்பார்கள்.

ஆனால் இந்தப் பாண்டி நாட்டுச் சிற்பிகளுக்கு முதுகுக்கு மண் காட்டியிருக்கிறான் சோழநாட்டுச் சிற்பி ஒருவன். ஆம், பாண்டியர் சோழர் போர், அதில் சோழ மன்னர் அடைந்த வெற்றியைப்பற்றி யெல்லாம்தான் சரித்திரத்தில் நிறையப் படித்திருக் கிறோமே. கலை உலகிலுமே இந்தப் போர் நிகழ்கிறது. கல்லில் உருவாக்கிய இந்தக் கல்யாண சுந்தரர் கோலத்தைச் செம்பிலே வடித்திருக்கிறான் ஒரு சிற்பி காவிரிக்கரையிலே.

'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கி னாள்' என்றபின் அண்ணனுக்கு அங்கு இடமில்லை. தாரைவார்த்துக் கொடுக்கும் சம்பிரதாயம் எல்லாம் அவசியம் இல்லை என்று கண்டிருக்கிறான். ஆதலால் அண்ணனை அப்படியே ஒதுக்கிவிடுகிறான். திருமணம் முடிந்ததும் முழுதுலகீன்றவள் செங்கை யைப்பற்றி இழுத்துக்கொண்டு மிக்க மிடுக்கோ டேயே தன் இருப்பிடம் கூட்டிச் செல்கிறான் சுந்தரன். புதுமணப் பெண்ணான அந்தத் தென்ன வள் மகளோ, நாணிக் கோணினாலும் அழகனை மணந்திருக்கிறோம் என்ற பெருமிதத்தோடேயே அவன் பின்னாலே மணவறையை வலம் வருகிறாள்.

மங்கையும் மணாளனும் மணவறை புகுகின்ற காட்சியையே செப்புச்சிலையாக வடிக்கிறான் இந்தச் சோழ நாட்டுச் சிற்பி. அந்த அழகிய கலியாணசுந்தரர் கோலத்தை நேரிலே காணவேண்டுமானால் மாயூரத்தை அடுத்த திருவேள்விக் குடிக்கே செல்லுங்கள் என்று சொல்லிவிட்டு நான் நின்று கொள்கிறேன்.

இப்படிக் கலைஞர் நடத்தும் கடவுள் திருமணத்தையெல்லாம் கண்டுகளித்தவர்களுக்கு ஒரே ஒரு வார்த்தை. தமிழ்நாட்டில் சிவன் கோயில்கள் எத்தனை எத்தனையோ. அத்தனை கோவில்களிலும் அம்பிகை சந்நிதிகளும் உண்டு. இந்த அம்பிகைகள் எல்லோரும் ஒரே மூர்த்தம்தான் என்றாலும் அவர்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயரிட்டு அழைக்கிறார்கள், கவிஞர்கள், கலைஞர்கள், பக்தர்கள். வண்டமர் பூங்குழலி, ஏலவார் குழலி, மட்டுவார் குழலி என்று அவள் தன் குழல் அழகிலேயே மெய் மறந்து நிற்பவர்கள் உண்டு. தேனார் மொழியாள், குழல்வாய் மொழியாள், யாழைப்பழித்த மொழியாள் என்று அவளது கரும்பன்ன சொல்லிலேயே மயங்குபவர்களும் உண்டு. ஏன்? அன்னை அருந்தும் அமுத கலசமான அந்த உண்ணாமுலையையும், முயங்கு பூண் முலையையும், ஒப்பிலா முலையையுமே நினைந்து நினைந்து வாழ்த்தியவர்களும் உண்டு. என்றாலும் அவளது கருணை நிறைந்த கண்களையும் அக் கண்கள் மூலம் உயிர்களுக்கு அருளும் செல்வங்களையுமே நினைந்து வேல் நெடுங்கண்ணி, மாழையங்கண்ணி, மைமேவுகண்ணி யென்றெல்லாம் போற்றத் தெரிந்தவர்களே, அவளை மீன் கண்ணி, மீனாக்ஷி என்றெல்லாம் வாழ்த்தவும் தெரிந்திருக்கிறார்கள்.

இப்படி இறைவியை மீன் கண்ணி என்று அழைப்பதுதான் எவ்வளவு பொருத்தம். உருவத்தாலும், வடிவத்தாலும் பிறழும் தன்மையாலும் அவள் கண் மீன் கண் போன்றது என்று உவமிப்பது எளிதுதான். ஆனல், உலகில் கண்படைத்த ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் கண் என்றிருந்தால் கண் இரைப்பை என்று ஒன்றிருக்க, இரப்பையே இல்லாது விழித்த கண் விழித்தபடியே இருந்து வாழும் ஜீவராசி மீன் ஒன்றே என்றும், இந்த உலகையும் உயிர்களையும் காக்கின்ற அம்மை விழித்த கண் விழித்தபடியே இருந்து, ஆம், கண் இமையாது நின்று காக்கின்றவள் என்றும் நாம் தெரிந்து கொள்ளும்போது அவளை மீன் கண்ணி என்று அழைப்பதின் அருமையை அறிந்து மகிழலாம் தானே. இத்துடன் மீன் முட்டையிடுவதும், அதிலிருந்து குஞ்சுகள் பிறப்பதுமே ஒரு விந்தை. மீன் தான் இடும் ஆயிரக்கணக்கான முட்டைகளைத் தன் இமையற்ற கண்களால் கூர்ந்து நோக்கியே குஞ்சுகளைப்பொரிக்கச் செய்கின்றன. ஆம், அதேபோலக் கடைக்கண் நோக்காலேயே மக்களுக்கு அருள் புரியும் அன்னையை மீன்கண்ணி என்று அழைக்காமல் வேறு என்ன சொல்லித்தான் அழைப்பது. இதையெல்லாம் தெரிந்துதானே

> ஒளியால் உலகீன்று உயிரனைத்தும்
> மீன்போல் செவ்வியுற நோக்கி
> அளியால் வளர்க்கும் அங்கயற்கண்
> அன்னே கன்னியன்னமே.

என்று மீனக்ஷியையே கூவி அழைத்திருக்கிருர்கள் நம் முன்னேர்.

இந்த மீனுக்ஷியை மணந்த சுந்தரர் ஏதோ மனைவிக்கு அடங்கிய கணவனுக வாழ்ந்தாலும் சும்மா வீட்டில் முடங்கிக் கிடக்கவில்லை. தருமிக் குப் பொற்கிழி அளிக்க புலவனுக வேடம் தாங்கி, சங்கப் புலவர்களோடு வாதாடி இருக்கிருர். ஏழைச் செட்டிப் பையனது சொத்தை தாயாதிகள் அபகரித் துக்கொண்டபோது மாமனுக வந்து வழக்குரைத்தி ருக்கிருர். பாணபத்திரருக்காக விறகு விற்றிருக்கிருர். எல்லாம் வல்லசித்தராக கல்யாணைக்கு கரும்பருத்தி இருக்கிருர். கரிக்குருவிக்கு உபதேசித்திருக்கிருர். ஏன், நரியைப் பரியாக்கி, பரியை நரியாக்கும் குதிரைக்காரராகவும் வந்திருக்கிருர். வந்தியின் பிட் டுக்கு மண் சுமந்து மன்னவன் கையில் பிரம்படிபட் டிருக்கிருர். இப்படி இவர் செய்த திருவிளையாடல் கள் ஒன்றிரண்டு அல்ல; அறுபத்து நான்கு என்று அறிகிருேம். இத்தனை திருவிளையாடலையும் இவர் நடத்த இவருக்குப் பின்னிருந்து ஆட்டிவைத்தவள் அன்னை மீனுக்ஷியே என்பதையுமே நாம் தெரிவோம் தானே.

இந்தத் திருவிளையாடல்கள் எல்லாம் புராணப் பிரசித்தமானவை. சரித்திரப் பிரசித்திப் பெற்ற அம்மையின் திருவிளையாடல் ஒன்று சமீப காலத்தி யது. மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் பிரபலமானவர் திருமலை நாயக்கர். மீனுக்ஷியம்மை கோயிலின் பெரும் பகுதியை மண்டபங்களாலும், கோயில்களாலும் அலங்கரித்தவர் அவரே.

அவருக்கு அன்னையிடம் ஆராத பக்தி. அவரது அவைக்கு குமரகுருபரர் வந்தபொழுது-அம்மையின் பேரில் ஒரு பிள்ளைத் தமிழ் பாடிக் கொடுக்க

வேண்டினர். அவரும் இசைந்து பாடல்கள் எழுதினர். அந்தப் பிள்ளைத் தமிழின் அரங்கேற்றம் நடக்கிறது திருமலை நாயக்கர் முன்னிலையிலே. பாடல்களை ஒன்றுக்குமேல் ஒன்ருகக் குமரகுருபரர் பாடிக் கொண்டே இருக்கிருர். அப்போது ஒரு சிறு பெண் ஐந்து ஆறு வயதிருக்கும், அர்ச்சகர்கள் இருந்த பகுதியிலிருந்து எழுந்து வந்து மிக்க உரிமையோடு நாயக்க மன்னர் மடிமீது ஏறி உட்கார்ந்து கொண்டது. அர்ச்சகர் பெண் என்று எண்ணிக்கொண்டார்கள் எல்லோரும். பெண்ணும் பாடல்களைக் கேட்டுக் கேட்டு அனுபவித்தது. கடைசியில்

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
    தொடையின் பயனே, துறைபழுத்த
நரைத் தீந்தமிழில் ஒழுகும் நறுஞ்
    சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
    ஏற்றும் விளக்கே, வளர்சிமய இமயப்
பொருப்பில் விளையாடும் இளமென்
    பிடியே, எரிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
    ஒருவன்திருஉளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
    உயிரோவியமே, மதுகரம் வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும்
    இளவஞ்சிக் கொடியே வருகவே
மலையத்துவஜன் பெற்றபெரு
    வாழ்வே வருக வருகவே

என்ற பாட்டை குமரகுருபரர் பாடி முடித்ததும், நாயக்கர் மடியில் இருந்த பெண் எழுந்து நடந்து

குமரகுருபரர் இருந்த இடம் சென்று தன் கழுத்தில் கிடந்த முத்து மாலையைக் கழற்றி அவர் கழுத்தில் போட்டுவிட்டு மறைந்துவிட்டது. அப்படி வந்து பிள்ளைத் தமிழைப் பிள்ளையாகவே இருந்து கேட்டவள் அன்னை மீனாக்ஷியே என்று அறிந்து அவள் தன் கருணைத்திறனை நினைந்து அதிசயித்து நின்றனர் எல்லோரும். இப்படிக் கண் கண்ட தெய்வமாக அன்னை மீனாக்ஷி ஆட்சி செய்கிறாள்; அருள் புரிகிறாள் அந்த பழமையான பாண்டியர் தலைநகரான மதுரையிலே.

வரைராஜனுக்கு, இரு கண்மணியாய்
உதித்தமலை வளர்காதலி
பெண் உமையே

அன்னை மீனாக்ஷியாக அவதரித்தவள் என்பதை நாம் முன்னரே அறிந்திருக்கிறோம். ஆனால் அவளே மலைமகள், அலைமகள், கலைமகள் மூவரும் ஒருங்கு சேர நிற்கும் பராபரை, பராசக்தி என்பதைத்தான்,

கலைமகளே, வடிவணங்கே
கமலமுகத் திருமாதே
கருணையாளே
மலைமகளே, அறந்தழைக்கும்
சொக்கர்பங்கில் மீனாக்ஷி
மதுரைத்தாயே

என்று பாடிப்பாடி மகிழ்கிறார் ஒரு கவிஞர். அதையே நாமும் பாடிப் பாடி மகிழலாம்தானே.

13

## தாயான தத்துவம்

**பிரான்சு தேசத்திலே இரண்டு கதைகள்.**

ஒரு கதை

கடவுள் மனிதனை முதல் முதலாகப் படைத்து பூமிக்கு அனுப்பி வைக்கிறார். ஆனால் மனிதனுக்கு இந்த உலகம் பிடிக்கவில்லை. சுவர்க்கத்திற்கே திரும்ப ஓடி விடுகிறான். கடவுள் பார்க்கிறார். அவனை இந்த நில உலகத்திலேயே இருத்திக்கொள்வதற்காக இன்பப் பொருள்களான பசுஞ்சோலை, வண்ணமலர் சுவைப் பழம், இசைத் தும்பி, வெள்ளருவி, நீராழி இன்னும் என்ன என்ன எல்லாமோ கொடுத்துத் திரும்பவும் அனுப்பிவைக்கிறார். மனிதனுக்கு இவை ஒன்றும் அவன் விரும்பும் இன்பத்தை அளித்து விடவில்லை. ஆதலால் திரும்பத் திரும்ப சுவர்க்கத் திற்கே ஓடிவிடுகிறான். கடைசியிலே கடவுள் பார்த் தார். ஒரு பெண்ணைப் படைத்து அப் பெண்ணை மனிதனுடன் உலகத்திற்கு அனுப்பி வைக்கிறார். அவ்வளவு தான் உலகத்திற்கு வந்த மனிதன் சுவர்க் கத்திற்குத் திரும்பவே இல்லை. இப்படி ஒரு கதை.

மற்றொரு கதை

சைத்தான் கடவுளின் மகனைக் கெடுக்க எண் ணுகிறான். பூமிக்கடியிலே தங்கத்தையும் வைரத்தை யும் புதைத்து வைக்கிறான். மரங்களில் இருந்து மதுவைக் குடம் குடமாகப் பொழிய வைக்கிறான். கடலுக் கடியிலே முத்தையும் பவளத்தையும் பரப்பி வைக்கிறான். இந்தப் பொன்னாலும் பொருளாலும் மதுவாலும் அவனைக் கெடுக்க முடியவில்லை.

கடைசியில் அவனைக் கெடுக்க, ஒரு பெண்ணையே அவனிடம் அனுப்பிவைக்கிறான். மனிதன் கெட்டே போய் விடுகிறான்.

கதை இரண்டுமே ஒரு கலைஞனது கற்பனையில் உதித்ததுதான். பெண் மனிதனைவாழ்விக்கவந்தவள், அவன் விரும்பும் இன்பத்தையெல்லாம் அவனுக்குக் கொடுக்கக் கூடியவள் என்ற ஒரு அடிப்படை எண்ணத்திலே உருவானது தான் முதல் கற்பனை. அதே சமயத்தில் எவ்வளவோ ஒழுக்கமாக வாழ்கிற மனிதனும், பொருளாலும் மதுவாலும் கெட்டொழிந்து போகாத மனிதனும், பெண்ணால் கெட்டு விடுகிறான் என்ற உண்மையை விளக்க எழுந்தது இரண்டாவது கதை. இரண்டு கதையிலும் உண்மை புதைந்து கிடக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆம் மனிதனை வாழ்விப்பவளும் தாழ்விப்பவளும் பெண்தான். இந்த அளவிற்குத் தான் பிரான்சு தேசத்து கலைஞனின் கற்பனை சொல்லுகிறது.

ஆனால் இதே கற்பனையைத் தொடர்ந்து நான் ஒரு கதைசொல்லக்கூடும். இப்படிப்பூமியிலே வந்து நிலைத்த மனிதனும் பெண்ணும் தங்களைப் படைத்த தலைவன் அறிய முற்படுகிறார்கள். மனிதன் சொல்கிறான் அந்த இறை ஆண்மகனாகத்தான் இருக்கிறான் என்று. பெண் சொல்லுகிறாள்: இல்லை, அந்தப் பரம்பொருள் பெண்மணியாகத்தான் இருக்கிறாள் என்று. இருவருடைய விவாதமும் தீர்ந்தபாடாக இல்லை; கடைசியிலே இருவருக்கும் பிறக்கிறான் ஒரு பிள்ளை. அந்தப் பிள்ளை வளர்ந்து பெரியவன் ஆகிறான். அவனிடமே கேட்கிறார்கள், இந்த மனிதனும்

மனுஷியும். 'அவர்களை எல்லாம் படைத்த கடவுளின் திருவுரு' எது என்று, அவன் சொல்கிறான்'அவள் தாயாக இருக்கிறாள்' என்று. விளக்கம் கேட்டபோது மேலும் கூறுகிறான், 'இறையினிடத்திலே ஆண்மையுமில்லை, பெண்மையுமில்லை தாய்மைதான் நிறைந்திருக்கிறது' என்று. உண்மை தானே, அந்த மகன் கண்ட கண்கண்ட தெய்வம் தாய்தானே. அந்தத் தாய் சுட்டிக்காட்டியபின் தானே தந்தையையே அறிந்து கொள்கிறான். அன்னையிடம் பெற்ற அன்பால் வளருகிற பிள்ளை, தந்தையிடம் அறிவைப் பெறுகிறான். அன்பைச் சொரிபவளாக அம்மையும், அறிவை வளர்ப்பவனாக அப்பனும் அமைகிறார்கள். அதனால்தான் - கடவுளை மனிதன் முதன் முதல் வழிபடத் தெரிந்தது தாய் உருவில்தான்.

பால் நினைந்து ஊட்டும் தாயின் அன்பைப் பாடிய மணிவாசகர் கசிந்து கசிந்து மேலும் மேலும் இறைவன் அருளை

தாயாய் முலையைத் தருவானே
தாராது ஒழிந்தால், சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ

என்று உள்ளம் உருகப் பாடுகிறார்.

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்
உடன் தோன்றும் இறைவனை
தாயவன்காண், உலகிற்கு
தன்னொப்பில்லாத தத்துவன்காண்

என்று அப்பர் பாடி மகிழ்கிறார். இப்படித் தாயான தத்துவனாகவே, இறை வழிபாடு மனிதன் உள்ளத்தில் எழுந்திருக்கிறது.

பேசரிய உயிரையெலாம் பெற்று,
நோக்கி, பெரும் போகம் அவை அளித்து
பிறப்பினையும் ஒழித்திட்டு
ஆசு அகலும் அடியர் உளத்து அப்பனுடன்
இருக்கும் அன்னையைக்
கண்டு தொழாத கலைஞன் இல்லை
கசிந்து பாடாத கவிஞன் இல்லை.

இந்த உலகிலே பிறந்த மனிதன் முதலில் உண்ணத் தெரிந்திருக்கிறான். பிறகு உடுக்கத் தெரிந்திருக்கிறான். பின்னால் இருக்க, படுக்க இடம் தேடி இருக்கிறான். உண்டு. உடுத்து, இருந்த மனிதன் தன் வாழ்வு இதனால் மட்டும் நிறைவு பெறவில்லை என்று எண்ணியிருக்கிறான். அப்படி வாழ்பவன், இன்பத்திற்காக ஏங்குகின்ற மனிதன் ஓங்கி உயர்ந்த மலையைக் கண்டு, அதனுடைய அழகை, காம்பீரியத்தை கண்டு அதிசயித்து நின்றிருக்கிறான். அகன்று பரந்த கடலைக் கண்டு அந்தக் கடலில் விளையும் முத்தையும் பவளத்தையும் பார்த்து, அந்தக் கடல் அலை எழுப்பும் இன்னிசையைக் கேட்டு தன் வயம் இழந்திருக்கிறான். முன்னமே இறையைத் தாய்மை உருவிலே கண்டு தொழக் கற்ற இந்த மனிதன், மலையையும் அலையையுமே உருவகப்படுத்தி, மலைமகளாக, அலைமகளாக அந்த அன்னையை நினைத்திருக்கிறான். இந்த மலை மூலமாக அலை மூலமாக ஆரம்பித்த அன்னை வழிபாடு, அவன் உள்ளத்தில் எழுந்த அழகுணர்ச்சி காரணமாக அந்த அன்னையையே உலகிற்கு அன்போடு அறிவையும் நல்கும் நல்ல கலைமகளாகவும் உருவகப்படுத்தியிருக்கிறது. இப்படித்தான், மலைமகள் அலைமகள்,

கலைம்களாக அன்னை அவன் எண்ணத்தில் தோன்றியிருக்கிருள். இப்படி மூன்று அன்னையரை உருவாக்கிய அவன் மூவரையும் ஒருவராகவே காணும் பேற்றுக்குத் தவங்கிடந்திருக்கிருன். இப்படி மூவரும் ஒருருவாய் இணைந்து நிற்கும் அன்னையே தேவர் மூவர்க்கும் முதற்பொருள்; அவர்கள் செய்யும் முத்தொழிலுக்கும் அடிகோலுபவள். அவளே பராசக்தி என்றெல்லாம் எண்ணியிருக்கிருன். இப்படி எண்ணியவன் உள்ளத்திலே.

மூவர்க்கும் முதற்பொருளாய்
முத் தொழிலிற்கும் வித்தாகி
நாவிற்கும், மனத்திற்கும்,
நாடறிய பேரறிவாய்
தேவர்க்கும், முனிவர்க்கும்,
சித்தர்க்கும், நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும்
எழிற்பரையை வணங்குவாம்

என்ற பாடல் எழுந்திருக்கிறது. இந்தப் பராசக்திதான் எண்ணற்ற திருப்பெயர்களோடு, எழில் நிறைந்த எத்தனை எத்தனையோ திருவுருவங்களில் எல்லாக் கோயில்களிலும் காட்சி கொடுக்கிருள் இன்று. சில தலங்களில் அழகொழுகும் கன்னிப் பெண்ணுக, சில இடங்களில் அழுகொழுகும் கருணைவடிவாக எல்லாம் அவளைக் காண்கிரும். கன்னிப் பெண்ணுக, கட்டழகியாக, ஆட்சி புரியும் அரசியாக, அன்புடைய தெய்வமாக எல்லாம் நின்று நமக்கு அருள்புரிபவள் தான் அன்னை மீனுக்ஷி. அதனுல்தான் இங்கு அவளுக்கு முதலிடம்

கொடுத்திருக்கிறோம். அந்த அன்னையைப் போன்ற தேவியர் பலர் பிரசித்த மானவர்கள். அவர்களில் ஒரு சிலர்தான் இங்கு இடம் பெறுகிறார்கள். இடம் பெறாதவர்கள் எல்லாம் அற்ப சொற்பமானவர்கள் அல்ல. அண்ணாமலையில் உள்ள உண்ணாமுலை யும், ஆரூர் கமலாம்பிகையும், ஐயாற்று அறம் வளர்த்தாளும், கழுக்குன்றத்து திரிபுரசுந்தரியும், தஞ்சைப் பெரிய நாயகியும் பிரபலமானவர்கள் மாத் திரம் அல்ல வேண்டுவார் வேண்டுவன எல்லாம் அளித்துக் காக்கும் அன்னையர். அவர்களைக் கண்டு தொழும்பேறு எல்லோர்க்கும் வாய்க்கவேண்டும் என்பதே என் விருப்பம்.

பொங்குருச் செல்வம் கல்வி
பொருவிலா வாய்மை தூய்மை
இங்கு எமக்கு அருளவல்ல
இணையிலா எம்பிராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடல்
பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை
அடிக் கமலங்கள் போற்றி

—வேம்பத்தூரார்



கன்னிக் குமரி

# கன்னிக்குமரி

நீலத்திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம் செய்குமரி எல்லை

என்றே தமிழ் நாட்டின் தெற்கெல்லையைக் குறிப்பிடுகிருர் பாரதியார். அந்தக் குமரி முனையிலே தான் அன்னை பகவதி கன்னியாக நின்று தவம் செய்து கொண்டிருக்கிருள். இந்த அம்மை பகவதியைப்பற்றி எத்தனையோ ரஸமான கதைகள். பரத கண்டத்தையே ஆண்ட ஆதிப் பரத மன்னனது புதல்வர் எட்டுப்பேர்; ஆனல் குமரி என்று ஒரே புதல்வி. ஏழு அண்ணன்மாருக்கு ஒரு தங்கை வள்ளி என்ருல், எட்டு அண்ணன்மாருக்கு ஒரு தங்கையாகக் குமரி பிறக்கிருள், வளர்கிருள். எட்டு ஆண் மக்களுக்கும் ஒரு பெண் மகளுக்கும் நாட்டைப் பங்கிட்டுக் கொடுக்கிருன் பரதன். குமரி இருந்து ஆண்ட இடமே இன்றைய குமரிமுனை என்கிறது ஒரு கதை.

அன்னை செய்யும் தவத்தைக் குறித்தும் ஒரு புராணக்கதை. வாசுதேவரையும் தேவகியையும் கம்சன் சிறையில் அடைத்து விடுகிருன். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை யெல்லாம் கொன்று தீர்க்கிருன், அப்படிப்பிறக்கும் குழந்தை ஒன்றினுற் தான் அவனுக்கு மரணம் என்று சோதிடர்கள்

கூறிவிடுவதால். ஏழு குழந்தைகளை இப்படிப் பலியா கக் கொடுத்த தேவகிக்குக் கண்ணன் பிறக்கிருன் சிறையில். வசுதேவருக்கு இந்தப் பிள்ளையைக் காப் பாற்றவேண்டும் என்று தோன்றுகிறது. இரவோடு இரவாக யமுனையைக் கடந்து, கோகுலத்தில் யசோதையிடம் கண்ணனைச் சேர்த்து விடுகிருர். அங்கு பிறந்திருந்த பெண் குழந்தையை எடுத்து வந்து தேவகியின் பக்கத்தில் விட்டு விடுகிருர். கம்ஸன் வந்து இந்தப் பெண் பிள்ளையே, தேவகி யின் குழந்தை என்று எண்ணி அதனைக் கொல்ல முயல்கிறபோது, அந்தத் தெய்வக் குழவி அவனை இகழ்ந்து உதைத்துத் தள்ளிவிட்டு அந்தரத்திலே மறைகிறது. இப்படி மறைந்த குழந்தையே திரு மாலின் தங்கையான எல்லாம் வல்ல சக்தி. அந்தச் சக்தியே பகவதி என்னும் திருநாமத்தோடு இந்தத் தென் சமுத்திரக்கரையில் நின்று, கையில் இலுப் பைப்பூ மாலை தாங்கி சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்கிறவள். என்றும் கன்னியாக-குமரியாக இருந்து தவம் செய்யும் பகவதியைத்தான் இன்றும் குமரி என்று வந்தித்து வணங்குகிருேம்.

இதை யெல்லாம் தூக்கியடிக்கும் வேருெரு கதையும் உண்டு. பாகன் மூகன் என்று இரண்டு அசுரர்கள் தேவர்களுக்கு இடுக்கண் செய்கிருர்கள். தேவர்கள் முறையிட இறைவன் தன்னுடைய சக் தியை இரு கூருக்கி இரண்டு பெண் தெய்வங்களாக உருவாக்குகிருர். வட கோடியில் கங்கைக்கரையில் காளியாகவும், தென் கோடியில் கடற்கரையில் குமரியாகவும் இரு சக்திகளும் நின்று நம்மைக்

காக்கின்றன. பாகனுடனும் மூகனுடனும் போர் புரிந்து வெல்கிறார்கள். தேவர்கள் இடுக்கண் தீர் கின்றன.

தாணு, மால், அயன் என்ற திரிமூர்த்திகளும் இணைந்த ஒரு மூர்த்தியாக, சிவபெருமான் கோயில் கொள்கிறார் சுசீந்திரம் என்னும் தலத்தில். இந்த மூர்த்தி அன்னை பகவதியின் அழகைப் பற்றிக் கேள் விப் படுகிறார். அத் தலத்தில் உள்ள கன்னி அம்ப லத்தில் தேவர்களை எல்லாம் கூட்டித் தன் கருத்தை வெளியிடுகிறார். குமரி செய்யும் தவத்தால் மகளிர் இனமே உய்யும் என்றாலும், இறைவன் விருப்பத் திற்கு எதிர் சொல்லத் துணிவில்லை. ஆனால் நாரத ருக்கு மட்டும் இத் திருமணத்தை இடைநின்று தடுத்துவிட வேண்டும் என்று தோன்றுகிறது. அவர் குமரியை மணம் பேசச் செல்கிறார். குமரியின் சம்மதத்தையும் பெற்று வருகிறார். வந்தவர் திரும ணம் நடக்க ஒரு பெரிய நிபந்தனையையும் போடுகி றார். பெண்ணுக்குப் பரிசமாகக் சாம்பில்லாத வெற் றிலை, கணு இல்லாத கரும்பு, கண் இல்லாத தேங் காய் இப்படி இன்னும் பல பொருள்களைக் கொண்டு வர வேண்டும் என்கிறார். அத்துடன், திருமண முகூர்த்தம் சூரிய உதயத்தில் என்றும், அதற்கு ஒரு நாளிகைக்கு முன்னமேயே மணமகன் மணவ றைக்கு வந்துவிட வேண்டும் என்றும் நிபந்தனை. இறைவன் இதற்கெல்லாம் அஞ்சவில்லை. கேட்ட பொருள்களை எல்லாம் வண்டி வண்டியாக முன் கூட்டியே அனுப்பிவைக்கிறார். ஐந்து மைல் தூரத் தைக் கடக்க அர்த்தராத்திரியே புறப்பட்டுவிடுகிறார். ஆனால் இந்த நாரதர் பார்த்தார். அவர் திருமண

மண்டபம் வந்து சேரும் முன்பே சேவல் உருவெடுத்துச் சூரிய உதயத்தை அறிவிக்கும் உதயராகத்தை-கொக்கரக்கோ-கோ என்று கூவி விடுகிறார். சரி விடிந்து விட்டது முகூர்த்த நேரம் தவறிவிட்டது என்ற அவமானத்தோடு சுசீந்திரத்திற்கே திரும்பி விடுகிறார் இறைவன். இப்படி பகவதி-தாணுமாலயன் திருமணம் தடைப்பட்டு விடுகிறது. அன்னை பகவதியோ என்றும் கன்னியாக கிழக்கு நோக்கி தவக் கோலத்தில் நின்றுவிடுகிறாள். அவளுக்கு வந்த பரிசப் பொருள்களான பொன்னும் மணியும், நெல்லும் கரும்புமே இன்றும் குமரிக் கரையில் பல நிற மணலாகவும், பலவிதக் குன்றுகளாகவும் பரந்து கிடக்கின்றன.

என்ன அழகான கதை. அன்னைக்கும் அத்தனுக்கும் தலம் தோறும் திருக்கல்யாணம் நடத்தி அந்தக் கல்யாண கோலத்தை எல்லாம் கண்டு மகிழ்ந்த தமிழன். அன்னையைத் தவக் கோலத்திலேயே நிறுத்திப் பார்க்க எண்ணுகிறான். கணவன் மனைவி பிள்ளை குட்டிகள் என்று ஏற்பட்டுவிட்டால் அன்னைக்கு உலக மக்களைப்பற்றி அவர்தம் குறைகளைப்பற்றி யெல்லாம் கவலைப்பட நேரம் ஏது? ஆதலால் அவள் கன்னிப் பெண்ணாக, எண்ணியதை எல்லாம் பெறும் தவம் செய்யும் தெய்வமாக இருந்தால், வேண்டுவோர் வேண்டுவன எல்லாம் கொடுக்க இயலும் அல்லவா? அதற்கு வேண்டிய அன்பையும் அருளையும் அவள் செய்யும் தவமே அவளுக்குக் கொடுக்கும் அல்லவா? ஆதலால் அன்னை பகவதி என்றும் கன்னியாக, அழகான குமரிப் பெண்ணாகவே நின்று தவம் செய்து மக்களுக்கு

அருள் புரிகிருள் என்பது கலேஞன் கற்பனே. அதி லும் நாட்டின் தென் கோடியில் கிழக்கு நோக்கி நின்ருலும் அவள் கடைக்கண் நோக்கு வட இமயம் வரை நீண்டு செல்கிறதல்லவா ? அதனுல் நாடு முழுவதுமே செழிப்புற்று நாட்டு மக்கள் எல்லாம் நலம் பெறுகிருர்கள் என்பதுதானே கருத்து.

இக் குமரித்துறை கங்கைத் துறையைப் போலும், காவிரித் துறையைப் போலும் புனிதமா னது. அதனுல் அப்பர்

கங்கை ஆடில் என் ?
காவிரி ஆடில் என் ?
பொங்கு நீர்க் குமரித்
துறை ஆடில் என் ?
எங்கும் ஈசன்
எனுதவர்க்கு இல்லேயே

என்று பாடுகிருர். எங்கும் ஈசன் இருக்கிருன் என்று நம்புபவர்கள்தான் கங்கையையும், காவிரியையும் ஏன் குமரியையுமே போற்றக் கூடும். அத் துறை களில் உள்ள இறைவன் இறைவி திரு உருவங்களே வணங்கி அருள் பெறுதலும் கூடும்.

## நெல்வேலி வடிவன்னை

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணைமீது
உன் அருகிருந்து
நீ முத்தம் தா என்று, அவர்
கொஞ்சும்வேளை நித்தநித்தம்
வேய்முத்த ரோடு என் குறைகள்
எல்லாம் மெல்லமெல்லச்சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோ ?
நெல்வேலி வடிவன்னையே

என்று ஒரு பக்தன் பாடுகிறான், திருநெல்வேலியில் நெல்லையப்பருடன் கோயில்கொண்டிருக்கும் காந்தி மதியம்மையைப் பார்த்து. ஆம், மதுரை மீனாக்ஷி அம்மன் கோயிலிலும், திருநெல்வேலி காந்திமதி அம்மை கோயிலிலும் ஒரு சம்பிரதாயம். கோயிலுக்கு வரும் பக்தர்கள் முதலில் சென்று தொழுவது சொக்கலிங்கத்தையோ, நெல்லையப்பரையோ அல்ல. இரண்டிடங்களிலும் அம்மன் சந்நிதி வழியாக கோயிலுக்குள் சென்று அங்குள்ள மீனாக்ஷியை அல்லது காந்திமதியை வணங்கிவிட்டு, அதன்பின் ஒரு நடை நடந்து பிரகாரங்களைக் கடந்து சென்று தான் இறைவனை வணங்கி வருகிறார்கள். இதைப் பார்த்திருக்கிறான் ஒரு கவிஞன். கவிஞன் என்றால் தான் வறுமையும் உடன் பிறக்குமே. அதனால்

அவன் வாழ்வு நிறைவு பெருமல் குறைகள் நிறைந் திருக்கிறது. இப்படி வாழ்விலே துயறுரும் பக்தன்–கவிஞன் நெல்லையப்பரிடம் தன் குறைகளை எல் லாம் சொல்லிப் பரிகாரம் பெற விரும்புகிருன். இப் படி எண்ணிக் கொண்டே கோயில் வாயிலுக்கு வந்தவன் ஊராரோடு சேர்ந்து காந்திமதியம்மை யின் கோபுர வாயில் வழியாக நுழைந்து, ஊஞ்சல் மண்டபம், மணிமண்டபம், நடு மண்டபம் எல்லாம் கடந்து கர்ப்பக்கிரகத்தருகே வந்து சேருகிருன். அங்கேநிற்கும் அன்னையைப் பார்க்கிருன். அவளோ தலையில் வயிரமணிமுடி, ராக்கடி எல்லாம் அணிந்தி ருக்கிருள். மூக்கிலே பொட்டு மூக்குத்தி, புலாக்கு எல்லாம் அழகு செய்கின்றன. மார்பில் நவமணி வடம் பிறழ்கிறது. அடிகளில் மணிச் சிலம்பு ஒலிக்கி றது. வலக்கையை உயர்த்தி அதில் கிளியுடன்கூடி செண்டொன்று ஏந்தி; இடக் கையைத் தாழ்த்தி நிற்கும் அந்த வடிவழகியை ஒரு புதுமணப் பெண் ணுகவே காண்கிருன் கவிஞன். அப்போது தோன் றுகிறது கவிஞனுக்கு : ஏன் இந்தப் பெண்ணின் மூலமாகவே தனது விண்ணப்பத்தை வேணுவன நாதரிடம் சமர்ப்பிக்கலாமே என்று. அப்படி அவள் தனக்காகத் தன் கணவனிடம் பரிந்து பேசு வதற்கு நல்ல சந்தர்ப்பம், வாய்ப்பு எப்போது நேரும் என்பதையும் அவளிடமே முன்கூட்டியே தெரிவிக்கிருன். ஆம், அன்னையிடம் அத்தன் கொஞ்சவரும் வேளையில், தனக்காக அன்னைபரிந்து பேசிஞல் தன் காரியம் சித்திக்கும் என்பதை உணர்ந்து அழகாகக் குறிப்பிடுகிருன் கவிஞன். இப்படி எல்லாம் உண்மையில் நடக்கிறது என்றல்ல

பொருள். இறைவனையும் இறைவியையும் மனம் ஒத்த காதலர்கள் என்று கற்பனை பண்ணிக் கொண்டு கவிஞன் பாடுவதிலே ஒரு சுவை காண்கிறோமல்லவா? அந்தச் சுவையை நாம் எல்லாம் அனுபவிப்பதற்காகவே கவிஞன் இப்படி ஒரு நிலையைக் கற்பனை பண்ணுகிறான். கற்பனை அழகாக இருக்கிறது. பாடிப் பாடி மகிழப் பாட்டு ஏற்றதாக அமைந்துவிடுகிறது; நம் உள்ளத்திற்கு ஓர் உவகையையே கொடுக்கிறது.

இந்தப் பாட்டுடைத் தலைவிதான் நெல்வேலி வடிவன்னையாக விளங்கும் காந்திமதியம்மை. திருநெல்வேலியில் வீட்டுக்கொரு காந்திமதி, இல்லை காந்தி கட்டாயம் இருப்பாள். ஆடவர்களும் காந்திமதி நாதனைப் பெயர் பெறுவார்கள். இந்தக் காந்திமதி அம்மையையும் அந்தச் சாலிவாடீஸ்வரனான நெல்லையப்பரையும் ஐப்பசி மாத விழாவிலே கல்யாண கோலத்திலே காணலாம். கதை எல்லோருக்கும் தெரிந்த கதைதான். அன்னை பார்வதியை அத்தன் பரமேஸ்வரன் மணம் முடிக்கக் கருத்துக் கொள்கிறான். மண ஓலை அனுப்புகிறார்கள் எல்லோருக்கும். மக்களும் முனிவரும், தேவரும் பிறரும், கைலை நோக்கி விரைகின்றார்கள். எல்லோரும் இமயத்திற்கே வந்து சேர்ந்துவிடுகிறார்கள். அவ்வளவு தான். நாட்டின் வடகோடு தாழ்ந்து தென்கோடு தூக்கிக் கொள்கிறது. பார்க்கிறான் இறைவன் நாட்டைச் சமன் செய்ய வேண்டுமே என்று. வந்திருந்தவர்களில் தக்கார் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறான். ஆம், அந்த 'என்றுமுள தென்தமிழை இயம்பி இசை கொண்ட' குருமுனிவன் அகத்தியனையே அழைத்து

'நாடு சமனுக வேண்டுமானுல் நீர் தென் திசை சென்ருக வேண்டும்' என்கிருன். அகத்தியர் அப் போது 'நான் மட்டும் திருமணத்தைக் காண வேண் டாமா' என்று கவல்கிருர். திருமணம் முடிந்த உடனே, அந்தத் திருமணக் கோலத்தில் உமக்குக் காட்சி தருகிறேன் என்கிருன் இறைவன்.

இப்படிச் சொன்ன வாக்கை நிறைவேற்றுவதி லும் ஒரு யுக்தி பண்ணுகிருன். அன்னை அத்தனின் கண்களை ஒரு நாள் பொத்தி விளையாட அதனுல் அகிலலோகமே இருளில் ஆழ்ந்து சஞ்சலமுறு கிறது. இந்தப் பழியகல அன்னை கம்பை நதிக்கரை யிலே தவம்புரிகிருள். அவள் தவத்திற்கு இரங்கி இறைவன் அங்கு எழுந்தருளி காட்சி கொடுக்கிருர். அப்படிக் காட்சி கொடுத்து அவளைத் திருமணம் செய்து அத் திருமணக் கோலத்திலேயே அகத்தியர் முன்பு வந்து நின்று விடுகிருர்கள் இருவரும். அன்னை தங்கச்சப்பரத்தில் தவக்கோலத்தில் எழுந் தருள்வது, பின்னர் இருவரும் திருமணக் கோலத்தில் உலா வருவதெல்லாம் நெல்லையில் நடக்கும் ஐப்ப சித் திருவிழாவில் கண் கொள்ளாக் காட்சியாகும்.

ஏதோ வடிவழகியாக-காந்தி நிறைந்தவளாக மட்டும் இந்த அன்னை விளங்குவதில்லை. நல்ல அருள் நிறைந்தவளாகவும் மக்களுக்கெல்லாம் அருள் புரிபவளாகவும் விளங்குகின்ருள். திருநெல் வேலியை அடுத்த தச்ச நல்லூரில் அழகிய சொக்க நாதபிள்ளை என்று ஒரு புலவர் சமீப காலத்தில் இருந்தார். தாலுகா ஆபிஸில் 'காப்பிஸ்ட்' வேலை பார்த்தவர். அவருடைய சம்பளமோ மாதம்

பத்து ரூபாய். இவருக்குக் குறையில்லாதிருக்குமா? அவர் ஒரு நாள் இரவு கோயிலுக்குச் செல்கிறார். காந்திமதியின் சந்நிதிக்கே வந்து அங்கு மணிமண்டபத்தில் ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந்து இரண்டு கைகளையும் சேர்த்துக் குவித்துப் பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருக்கிறார். கோவிலுள்ளே சென்று வந்த யாரோ ஒரு பக்தை தன் அன்னையின் பிரசாதமாகப் பெற்று வந்த செண்டு ஒன்றை அவரது விரித்த உள்ளங்கைகளில் போட்டுவிட்டு நகர்கிறாள். ஆனால் அப் புலவருக்கோ, தன்கையில் செண்டு கொடுத்துத் தன்னிடம் கருணை காட்டுகிறவள் அன்னை காந்திமதியே என்ற நம்பிக்கை. அப்படி உறுதியாக நம்பிய உள்ளத்திலே ஒரு பாட்டு எழுகிறது, பாட்டு இதுதான்.

பணம், கொடுக்கு அது உள தேளும்
பாம்பும் போல, பாழ்த்த வறுமையும்
கடனும் படுத்துகின்ற
கணங்கொள், துக்கம் ஒழியும் வண்ணம்
கைச்செண்டு ஈந்த காந்தி மதித்
தாய் என்னைக் கைவிடாளே.

அன்னையின் அருளுக்கு இந்தப் பாட்டைவிட வேறு என்ன சான்று வேண்டும். தமிழ் வளரும் நெல்லையிலே கோயில்கொண்டிருக்கும் அன்னையையேபாட்டுடைத் தலைவியாக வைத்து ஒரு பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் பாடியிருக்கிறார். வருகைப் பருவத்தைப் பாடுபவர்கள் எல்லாம் என்னிடம் வந்தால் இன்ன இன்னது தருவேன் என்று சொல்லிச் சீராட்டி வருக வருக என அழைப்பார்கள். ஆனால் இந்தப் பிள்ளைத்

தமிழ் பாடிய கவிஞனே, நீ என்னிடம் வராவிட்டால் உனக்கு நான் ஒன்றுமே தரமாட்டேன் என்று கோபித்துக், கொள்ளும் பாவனையில் பாடுகிருன். ஆம், கவிஞனுக்குக் கொஞ்சி உறவாட, கோபித்து முறைத்துக்கொள்ள எல்லாம் உரிமையும் உண்டு தானே.

வாராதிருந்தால் இனி நான் உன்
வடிவேல் விழிக்கு மை எழுதேன்.
மதிவாள் நுதற்குத் திலகமிடேன்
மணியால் இழைத்த பணிபுனேயோன்
பேராத ரத்திஞேடு பழக்கம்
பேசேன் சிறிதும் முகம் பாரேன்
பிறங்கு முலைப்பால் இனிது ஊட்டேன்
பிரியமுடன் ஒக்கலையில் வைத்து
தேரார்வீதி வலங் காட்டேன்
செய்ய கனிவாய் முத்தமிடேன்
திகழும் மணித் தொட்டிலில் ஏற்றி
திருக்கண் வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில்
தவழும் குழந்தாய் வருகவே
சாலிப் பதிவாழ் காந்திமதித்தாயே
வருக வருகவே

இப்படிப் பாடிக் கூப்பிட்டுத்தான் பாருங்களேன் அன்னை ஓடி வருகிருளா, இல்லையா என்றுதான் தெரிந்துகொள்வோமே.

# சங்கரன் கோயில் கோமதி

தாய்தன்னை அறியாத கன்றில்லை
தன் கன்றை
ஆயும் அறியும், உலகின் தாயாகி
ஐய ! நீ அறிதி எப்பொருளும்

என்று இறைவன் தாய் ஆகி உலகில் உள்ள மக்களைப் புரக்கும் பான்மையைப் பாடுகிறான் கவிச் சக்ரவர்த்தி கம்பன். தாய்த் தன்மையிலும் தலை சிறந்த தாய்த் தன்மையாக அவன் கருதுவது பசுவிற்கும் கன்றிற்கும் உள்ள தொடர்பைத் தான். ஒரு பசுவின் கன்று தன் தாயை ஆயிரம் பசுக்களிடை நின்றாலும் கண்டு கொள்ளும். அதே போலத் தன் கன்றையும் ஆயிரம் கன்றுகளிடையே இருந்தாலும் தெரிந்துகொள்ளும் ஒரு பசு. இது ஓர் அதிசய அறிவுதானே. அந்த அறிவை உடையவள் உலகு புரக்கும் அன்னை. ஆம், அதனாலே அவளுக்கு ஒரு பெயர் ஆவுடையாள் என்று. ஆ என்றால் பசு. பசுக்களைத் தன் உடைமையாகக் கொண்டு காப்பாற்றுகிறவள் ஆவுடையாள். இந்த ஆவுடையாள் கோயில் கொண்டிருக்கும் இடந் தான் சங்கரன் கோயில். அவளைத்தான் கோமதி என்றும் அழைத்து வந்தித்து வணங்குகிறோம்.



சங்கரன்கோவில் கோமதி

உலகில் உள்ள மக்களுள் சிவனை வழிபடும் சைவர்கள் உண்டு. விஷ்ணுவை வழிபடும் வைண வர்கள் உண்டு. ஏதோ இவர்கள் அவரவர்களின் இஷ்ட தெய்வத்தை மட்டும் வழிபட்டார்கள் என் றில்லை. ஒருவர் மற்றொருவரைக் குறை கூறுவது, அவர்களோடு வாதிடுவது என்றெல்லாம் நெடுகி லும் வைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். ‘அரன் அதிகன்’ என்று சைவன் சொன்னால். ‘இல்லை உல களந்த அரி அதிகன்’ என்றே வாது செய்திருக் கிறான் வைணவன். ‘ஆலம் உண்டான் எங்கள் நீலகண்டன்’என்று சைவன் வீராப்போடுபேசினால், ‘அண்டம் உண்டபோது அந்த ஆலம் உண்ட கண் டனையும்கூட உண்டான் எங்கள் மால் என்று சளைக் காமலே பதில் சொல்லியிருக்கிறான். மக்களில் மாத் திரம் அல்ல’ நாகர்களிலும் இச்சைவ-வைணவச் சண்டை இருந்திருக்கிறது. சங்கன் பதுமன் என் னும் நாகர் இருவர் இருந்திருக்கின்றனர். இவர் களில் சங்கன் சிவபக்தன், பதுமன் விஷ்ணுபக்தன் இவர்களுக்குள்ளேயும் இந்த வாதம். இப்படிப் பலர் வாதிட வாதிட அன்னை கோமதிக்கே ஆம், பார்வ திக்கேதான் சந்தேகம் வந்துவிட்டது. இருவரும் வேறு வேறு நபர்கள்தானா என்று, இதைக் கேட்டி ருக்கிறாள் இறைவனிடம். அவர் என்ன அவ்வளவு எளிதாக விடை சொல்லி விடுவாரா ? மண்ணுலகத் துப் புன்னை வனத்தில் சென்று தவமிருக்கச் சொல் கிறார், அப்படியே அன்னையும் அங்கு வந்து தவம் கிடக்கிறாள். ஆடி மாதம் பௌர்ணமி யன்று சங்க ரனார் சங்கரநாராயணர் உருவில் வந்து அம்மைக் குக் காட்சி கொடுக்கிறார். சங்கரன் கோயிலில் ஆடிக்

தவசு என்னும் உத்சவம் இந்தச் சங்கர நாராயணர் காட்சியை விளக்க எழுந்ததே. இதனுல் அரி, அயன், அரன் எல்லோரும் ஒன்றே. அரியும் அயனும் அரனுர் திரு உருவில் அடங்கினவரே என்ற உண்மை நிலை பெற்றிருக்கிறது. ஆம், சங்கனும் பதுமனுமே இச்சங்கர நாராயணன் காட்சியைக் கண்டு உண்மை உணர்ந்து கொள்ளு டிருக்கின்றனர்.

ஐய ! நின் கூறே மாலும்
அயன் முதல் தேவும் என்னும்
மெய்உணர் வே எஞ் ஞான்றும்
விளைவுற வேண்டும்.

என்று இருவரும் சேர்ந்தே பாடத் தெரிந்து கொள் கின்றனர்.

சங்கர நாராயணன் திரு உருவைக் கண்ட அன்னை கோமதி அருட் சக்தி நிரம்ப வாய்ந்தவள். அம்மையின் திரு முன் ஒரு மந்திர சக்கரம் பதித்து வைத்திருக்கிறது. அச்சக்கரத்துக்குக் கோமதி யம்மை தந்தருளிய வல்லமையினுலே இன்றும் அதன் அருகில் ஆடாத பேயும் ஆடுகிறது; தீராத நோயும் தீர்கிறது. இச்சக்கரத்தைப் பதித்து அதற்கு அத்தனை சக்தியை அன்னை அருளச் செய்தவர் திரு வாவடுதுறை ஆதீன கர்த்தர் வேலப்ப தேசிகர். இவர் நெற்கட்டும் செவல் ஜமீன்தாரான சிவஞான பூலித்தேவரின் குன்ம நோய் தீர்த்தார் என்றும் அந்த ஜமீன்தார் வேண்டுகோளின்படியே மந்திர சக்கரத்தைப் பதித்தருளினுர் என்றும் தெரிகிறது.

சங்கரனுல் அன்னை கோமதியும், அம்மை கோமதியால் சங்கரனும் இங்கு வரப்பிரசாதிகளாக

அமைந்திருக்கின்றனர். புன்னை வனத்திலே புற்றில் இடம் கொண்டவர் சங்கரன். அந்தப் புற்றுமண் இன்று மக்கள் பிணியைத் தீர்க்கும் அருமருந்தாக உதவுகிறது. உடலில் பூசியும் உள்ளே கரைத்துக் குடித்தும் நலம் பெறும் மக்கள் எத்தனையோ பேர். ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாமலேயே அருள் புரிகின்றார், இந்த வன்மீக நாதராம் சங்கரன். அன்னை பொதுவாக மக்கள் எல்லோருக்கும் அருள் புரியபவள் தான்என்றாலும் தன் இனத்தாராகிய பெண் களிடத்து விசேஷ சலுகை காட்டுபவளாக இருக் கிறாள். பிள்ளைப்பேறு இல்லாதவர்களுக்குப் பிள்ளைப் பேற்றை அருளுகிறாள்; பேய்பிடித்தவர்களாக இருந் தால் பேயை ஓட்டி அவர்களை இன்பமான குடும்ப வாழ்க்கையில் இருத்துகிறாள். தேளும், பாம்பும், பூரானும், பூச்சியும் அன்னையையும் அத்தனையும் நினைப்பவர்கள் பக்கமே வருவதில்லை. மக்களும் தங்களுக்கு இப்பூச்சி பொட்டுகளால் துன்பம் நேரா திருக்க, வெள்ளியினால் தேளும் பாம்பும் செய்து காணிக்கை செலுத்தி வேண்டிக் கொள்ளுகின்றனர். இன்னும்,

அன்னை உமை கௌரி
　　ஆவுடையும் நீயும் இந்தப்
புன்னை வனம் மேவினது என்
　　பூசா பலன்தானோ?
நின்னைப் பொரு ளெனவே
　　நீங்காது உறைந் திருந்து
தன்னை அறிவது என்றோ
　　சங்கர சதா சிவமே

என்று அன்னை ஆவுடையையும் புன்னை வனத்து ஈசனையும் நினைந்து பாடியிருக்கின்றார் ஒரு புலவர், தான் பாடிய சங்கர சதாசிவ மாலையில். அன்னையின் அருட் சக்தியை உணர்ந்த திருநெல்வேலி அழகிய சொக்கநாத பிள்ளை ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார். பாட்டா பாடுகிறார்? அன்னைக்கே ஒரு சவால் விடுகிறார்:

கேடாய் வரும் நமனைக்
கிட்ட வராதே தூரப்
போடா, என்று ஓட்டி உன்
பொற்கமலத் தாள் நிழற்கீழ்
வாடா என அழைத்து
வாழ்வித்தால் அம்ம ! உனைக்
கூடா தென்று ஆர்தடுப்பார் ?
கோமதித்தாய் ஈஸ்வரியே !

என்பது பாட்டு. எவ்வளவு உறுதியான உள்ளம். யமனையே தூரப் போடா என்று ஓட்டி, தன் தாள் நிழலுக்கு வாடா என அழைக்க அன்னையால் முடியாதா என்ன? ஆம், அப்படி அழைப்பாள் என்று நம்புகிறான் கவிஞன். நாமும் நம்பலாம். நம்பினார் கெடுவதில்லை. அதுதானே நான்கு மறைத் தீர்ப்பு.

# ஆனைக்கா அகிலாண்டேஸ்வரி

மன்றலின் வந்து
    மணித்தவிசு ஏறி
வென்றி நெடுந்தகை
    வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும்
    எய்தி யிருந்தார்
ஒன்றிய போகமும்
    யோகமும் ஒத்தே

என்று கவிச் சக்ரவர்த்தி கம்பன் ராமனும் சீதையும் மணக் கோலத்தில் இருப்பதை நினைந்து பாடுகின்றான். இப்படி இருவரும் போகமும் யோகமும் ஒன்றிய நிலையில் இருந்தார்கள் என்று சொல்லுவது பொருந்துமா என்று நமக்கெல்லாம் ஒரு சந்தேகம் எழுகின்றது. இதுபோலவே, யோகம் போகம் இவற்றின் உண்மைகளைக் குறித்து ஒரு சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறாள் அன்னை பார்வதி. கேள்வியைத் தன் கணவனிடமே கேட்டிருக்கிறாள். அதற்கு விடை சிவபெருமான் அன்னையிடம் 'நீ பூலோகத்தில் ஞான தலத்தையடைந்து தவஞ்செய். அங்கு நான் வந்து உபதேசிக்கிறேன்' என்று சொல்கிறார். அப்படியே ஞான பூமியை நாடி வருகிறாள் அன்னை. காவிரிக் கரை

யிலே முனிவர்கள் எல்லாம் இருந்து தவம் செய்யும் ஓர் அழகிய காவினைக் கண்டு அங்கேயே தவம் செய்ய முனைகிறாள். இன்பத்தைத் தருகின்ற முத்தி யின் தன்மையைத் தெரிந்துகொள்ள வந்தவள் ஆதலின், இனிய சுவையுடைய நீரையே திரட்டி லிங்கத் திருவுரு அமைத்துக் கொள்கிறாள். இந்த அப்புலிங்கத்திற்கும் அபிஷேகம் முதலியன செய்து ஆராதனை பண்ணுகிறாள். இவள் தன் தவத்திற்கு இரங்கி அண்ணல் இந்த காவிற்கு வந்து, அவளது சந்தேகத்திற்கு விளக்கம் கூறுகிறார். அவர் கூறு யது இதுதான்: 'உலகங்கள் எல்லாம் என் அருள் வழியே நடப்பன. நடனத்தைப் பிறருக்குக் கற்பிக்க விரும்பும் நடன ஆசிரியன் முதலில் தானே நடனம் ஆடிக் காட்டுதல் போல உலக மக்களுக்கு யோக நிலையையும், போக நிலையையும் பயிற்றுவிக்க நானே நடத்திக் காட்ட வேண்டியிருக்கிறது. உல கிலுள்ள ஆன்மாக்களெல்லாம் போகத்தை நுகர உன்னை மணந்து தழுவி போகியாகவும், யோக சித்தி பெற்று மெஞ்ஞானத்தை அடைந்து முத்தி அடை வதற்காகப் போகியாக இருந்த நான் யோகியாக வும் இருக்கிறேன்' என்கிறார். ஆம், யோக நிலையில் இருக்கும் ஆண்டவனே போகியாகவும் காட்சிதரும் ரகசியம் இதுதான் என்று அன்னை அறிகிறாள்; நாமும் தெரிகிறோம்.

இப்படி அகில அண்டங்களுக்குத் தாயாகிய அன்னை வந்து நீர் உருவத்தில் இறைவனை வழி பட்ட இடம்தான் ஆனைக்கா. இந்த இடம் ஆனைக்கா என்று ஏன் அழைக்கப்படுகிறது? அதைத்

தெரிய வேண்டாமா? கைலையிலுள்ள இரண்டு கண நாதர்கள் ஏதோ சாபம் பெற்ற காரணத்தால் யானையாகவும் சிலந்தியாகவும் வந்து பிறக்கிறார்கள் இந்த ஞான பூமியிலே. அன்னை அகிலாண்டேஸ்வரி ஸ்தாபித்த அப்புலிங்கத்தை வழிபடுகிறார்கள். லிங்கமோ ஒரு நல்ல நாவல் மரத்தடியில் காவிரிக் கரையில் இருக்கிறது. ஆற்றின் தண்ணீரைத் தன் துதிக் கையாலே மொண்டு கொண்டு வந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்கிறது யானை. மரத்தின் தழைகள் இறைவன் மேல் விழாதவாறு நூல் பந்தல் இடுகிறது சிலந்தி. யானை இப்படி நூல் பந்தல் போடுவது தக்கதன்று என்று நினைக்கிறது. ஆதலால் தன் துதிக்கையாலேயே நூல் பந்தலைச் சிதைத்து விடுகிறது. சிலந்திக்கு யானை மீது கோபம். ஆதலால் யானையின் துதிக்கையுள் நுழைந்து கபாலம் வரை ஏறி யானையைக் கடிக்கிறது. யானை துடி துடித்து விழுந்து இறக்கிறது. துதிக்கையுள் சென்ற சிலந்தியும் வெளியே வர இயலாமல் மடிகிறது. இறைவன் இவர்கள் பக்தியை மெச்சி இவர்களுக்கு முத்தி அளிக்கிறான். சிலந்தியாய் இருந்தவன் அடுத்த பிறவியிலே கோச் செங்கட் சோழ மன்னனாகப் பிறக்கிறான். யானைமீது கொண்டிருந்த பகையை மறக்காமலே யானை ஏற இயலாத மாடக் கோயில்கள் எழுபது கட்டுகிறான். ஆனால் இறைவனோ ஆனை வழிபட்ட இந்த ஸ்தலத்தையே ஆனைக்காவாக ஆக்கி விடுகிறான். எழுபது கோயில்களுக்குச் சென்று படியேறி இறைவனை வழிபட இயலா விட்டாலும், ஒரு கோயிலையே தன்னுடையதாக ஆக்கிக்கொள்கிறது யானை. ஆம், அகிலாண்ட நாயகியோடு கோயில்

கொண்டுள்ள ஆனைக்கா அண்ணலையே அபய மாகக் கொண்டு வாழ்கிறது.

அகில அண்டங்களையும் அந்த அண்டங்களில் உள்ள அகில சராசரங்களையும் பெற்று வளர்க்கும் அன்னை அகிலாண்ட நாயகி என்று பெயர் பெறு வதில் வியப்பில்லை தான். ஆனால் இந்த அகி லாண்டகோடி யீன்ற அன்னையைத் தான் பின்னை யும் கன்னியென மறை பேசுகின்றது. அந்தப் பேச் சுக்கு ஏற்பவே அவள் இன்னும் ஆனந்த ரூப மயி லாக, அழகிய கன்னிப் பெண்ணாகவே காட்சி அளிக்கிறாள். இந்த அகிலாண்டேஸ்வரியைத்தான் கச்சியப்ப முனிவர்.

எண்ணிறந்த தாயர் வயிற்றிலிருந்து
பிறந்திடும் துயரம் அனைத்தும் நீங்க
மண்ணிறந்து, புனலிறந்து, வயங்கிய
செந்தீயிறந்து, வளியினோடு
விண்ணிறந்து, பெருங்கருணைத் தாயாகி
தனது அகட்டில் விரவ வைத்து
கண்ணிறந்த கவின்காட்டும் அகிலாண்ட
நாயகியைக் கருத்துள் வைப்பாம்.

என்று பாடி மகிழ்கிறார். அன்னையின் அழகும் அருள் பெருகும் திருவிழியும் காண்பவரது கண்ணையும் கருத்தையும் கவர்வன. தொழுவார் பிறவித் துயரை எல்லாம் துடைக்க வல்ல பெருமாட்டி அவள்.

அட்டசித்தி நலன் அன்பருக்கு அருள
விருது கட்டிய பொன் அன்னமே
அண்டகோடி புகழ் காவை வாழும்
அகிலாண்ட நாயகி என் அம்மை

என்று தாயுமான சுவாமிகள் தெரியாமலா பாடு கின்றார்.

உலகிடை அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்பது பழமொழி. ஆம், அன்று அந்தச் சீகாழிப் பிள்ளையும் அழுத போதுதானே, அன்னை வந்து ஞானப் பால் ஊட்டிச்சென்றிருக்கிறாள். ஆனால் குழந்தைகள் அழாமலே, பால் நினைந்து ஊட்டும் தாயர் எத்தனை எத்தனை பேர். அத்தகைய தாயரில் ஒருவராக அகிலாண்டேஸ்வரி இருக்க வேண்டும். பிள்ளைகள் அழும் வரை அவள் காத்திருக்கக்கூடாது என்று வேண்டிக் கொள்கிறார் ஒரு பக்தர். ஆம், அழுதால் பால் கிடைக்கும் என்று குழந்தைக்குத் தெரிந்தாலும், அதற்கு அழத்தெரிய வேண்டாமா? அழுதால் உன்னைப் பெறலாமே என்று சொல்வதை விட, நினைத்தால் உன்னைப் பெறலாம் என்ற நிலை யையே அன்னை அருள வேண்டும். அப்படி அருள் பெற்றவரே பாடுகிறார்:

உலகிடை அழுதபிள்ளை பால்குடிக்கும்
உண்மை என்று உரைப்பதற்கு ஏற்ப
இலகு சீகாழி மழவு அழ அளித்தாய்
இன்முலைப்பால். அழாவிடினும்
அலகு அற இறங்கி அளிப்பவர் இலையோ
அத்தகு மழவியான். அருள்வாய்
கலகமில் கழகம்சூழ் திருவானைக்கா
அகிலாண்ட நாயகியே

என்பது பாட்டு. ஆம், அழாமலே இந்த அன்னையின் அருளைப் பெறலாம் என்று தான் சொல்லுகிறேன் நானும்.

# கடவூர் அபிராமி

மார்க்கண்டன் கதை பிரசித்தமானது. பதினறு வயது வரையே வாழும் வரம் பெற்ற சிறந்த புதல்வனை மிருகண்டு முனிவன் இறை அருளால் பெறுகிருன். அந்தப் புதல்வன் மார்க்கண்டன் பதினறு வயது முடிகிறபோது, கடவூருக்கு வருகிருன். அங்குக் கோயில் கொண்டுள்ள அமிர்த கடேசுவரரை லிங்கத்தில் ஸ்தாபித்து பூசை செய்கிருன். அவன் அப்படிப் பூசை செய்து கொண்டிருக்கும் போது குறித்த பதினறு வயது நிரம்பி விடுகின்றது. வந்து விடுகிருன் காலன். மார்க்கண்டன்மீது பாசக்கயிற்றையும் வீசுகின்ருன். ஆனல் மார்க்கண்டனே, தான் பூஜித்த லிங்கத்தையே கட்டிப் பிடித்துக் கொள்கிருன். அப்போதும் விடுகிருனில்லை காலன். இறைவனுக்கோ காலன்மேல் கடுங்கோபம். 'எந்த நியதிக்கும் விதிவிலக்கு என்பது கிடையாதா? என்னையே கட்டிப்பிடித்திருக்கிற நேரத்திலுமா இவன் தன் கடமை தவருது அவன் உயிர் கவர வரவேணும்' என்று எண்ணுகிருன். லிங்கத்திலிருந்தே கிளம்பி எழுந்து காலனை எட்டி உதைத்து விலக்குகிருன். இப்படிக் காலனைக் காய்ந்த காலசம்ஹாரர் கடவூரில் பிரதான மூர்த்தியாக இன்று விளங்குகிருர். இறைவன் தன் சக்தியை எல்லாம் வெளிப்படுத்திய வீரட்டத் தலங்கள் எட்டு. அவைகளில் எல்லாம் மிக்க சிறப்பு வாய்ந்தது திருக்கடவூர்.



ஸ்ரீ அபிராமி அம்பாள்

ஆனால் இங்குள்ள கால சம்ஹாரரையும் விட மிக்க புகழ் பெற்றவராக அங்குக் கோயில் கொண்டிருப்பவள் தான் அன்னை அபிராமி. ஆயுள் விருத்தியை விரும்புபவர், காலனைக் காய்ந்த கடவூர் உறை உத்தமனை வழிபட்டால், வாழ்க்கையில் இடர் பட்டு இன்னல் உறுபவர்கள் எல்லாம் உத்தமியாம் அபிராமியை வழிபடுகிறார்கள். சரஸ்வதி தேவியே அன்னை அபிராமியைப் பூஜித்து அருள் பெற்றாள் என்றாள் அதிகம் சொல்வானேன் ?

இந்த அபிராமி இடத்திலே அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார் ஒரு பட்டர். பக்தி முற்றி உன்மத்தராகவே ஆகிவிடுகிறார். இதைக் கண்டு அர்ச்சகர்கள் எல்லாம் அவரை வெறுக்கிறார்கள். இவர் ஒரு நாள் அபிராமியின் சந்நிதியில் அமர்ந்து அன்னையை வழிபட்டுக் கொண்டிருக்கிறார். அந்தச் சமயத்தில் தஞ்சையில் இருந்து அரசு புரிந்த மராத்திய மன்னன் காவேரி சங்கம ஸ்நானம் முடித்துவிட்டுக் கடவூருக்கு வருகிறான். கோயிலுள் நுழைந்து அங்குள்ள இந்தப் பட்டரைப் பார்த்து, இன்று அமாவாசை எவ்வளவு நாழிகை வரை இருக்கிறது என்று கேட்கிறான். எங்கோ ஞாபகமாக இருந்த பட்டர், இன்று பௌர்ணமி அல்லவா ? என்று எதிர் கேள்வி போடுகிறார். அரசன் பக்கத்தில் இருந்த மற்றைய பட்டர்கள் இதுதான் சமயம் என்று, இவன் ஒரு பயித்தியக்காரன். அரசரிடமே நிறைந்த நாளாம் அமாவாசையைப் பௌர்ணமி என்கிறானே என்று தூபம் போடுகின்றனர். பட்டர் விழித்துக் கொள்கிறார்; உடன் தான் செய்த தவறை உணர்கிறார். ஆனால், அன்னை அபிராமி பிழையெல்லாம்

தவிர்க்கப் பணிப்பவள் அல்லவா? அவளேதான் இதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று எண்ணு கிறான். அபிராமியின் அருளால் பட்டர் பாடவே ஆரம்பித்து விடுகிறார் :

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம்
உணர்வு உடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க் கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்
குங்குமம் தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்றன் விழுத்துணையே

என்ற முதற் பாடல் உதிக்கின்றது அவரது நாவிலே. பாடல்கள் வளர்ந்தோங்கிக் கொண்டே செல்கின் றன. எழுபத்து எட்டுப் பாட்டுக்கள் முடிகின்றன. இப்படி எழுபத்து ஒன்பதாவது பாட்டு :

விழிக்கே அருளுண்டு அபிராம
வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு
எமக்கு அவ்வழி கிடக்க
பழிக்கே சுழன்று வெம்
பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்
தம்மோடு என்ன கூட்டுஇனியே

என்று அவர் பாடி முடித்தாரோ இல்லையோ. அவர் தன் நம்பிக்கையை இழந்துவிட அபிராமி விரும்ப வில்லை. அந்த மாலை நேரத்திலே தன் காதிலிருந்த தோடு ஒன்றைக்கழற்றி ஆகாயத்திலே வீசி எறிந்து

விட்டாள். அந்தத் தாடகமே வான வீதியிலே பூரண சந்திர வடிவமாகக் காட்சி அளிக்கிறது. ஆம். அமாவாசை அன்றே பௌர்ணமி நிலவு உதிப்பதைக் கண்டு அரசன் அர்ச்சகர்கள் எல்லாம் வியக்கின்றனர். பட்டரின் திருவடிகளில் விழுந்து வணங்கி அவரது மன்னிப்பை வேண்டுகின்றனர். அவரோ அபிராமியின் அருளை நினைந்து, நினைந்து மேலும் மேலும் பாடுகிறார். நூறு பாட்டுக்கள் பாடித் தான் தன் அந்தாதித் தொடையை முடிக்கிறார். இப் படி இவர் பாடிய பாடல்கள்தான் அபிராமி அந்தாதி. அன்று முதல் இந்தப் பட்டரே அபிராமி பட்டர் என்றும் பெயர்பெற்று விடுகிறார். பாடல்கள் எல் லாம் மிகவும் அருமையானவை. தேவியைத் தொழு வதற்கு ஏற்ற பாசுரங்களாக அமைந்தவை. இன்ன லுற்று இடர்படுவார் இந்தப் பாடல்களைப் பாடி அன்னை அபிராமியை வழிபட்டால் எல்லா நலமும் பெறுவர் என்பது நம்பிக்கை. அபிராமியின் கடைக் கண் நோக்கினால் மக்கள் பெறும் பேறுகள்தான் எத்தனை எத்தனை. அதையுமே சொல்கிறார் அபிராமி பட்டர்:

தனந்தரும் கல்வி தரும்,
ஒருநாளும் தளர்வு அறியா
இனந்தரும் தெய்வடிவும் தரும்,
நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவருக்கே
கனம்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே

என்பதுதான் அந்தப் பாட்டு.

அன்னை அபிராமியின் திருஉருவம் மிகவும் அழகு வாய்ந்தது. மூன்றடி உயரத்திலே அழகான தொரு பீடத்திலே நான்கு திருக் கரங்களோடு நின்றுகொண்டிருக்கிருள். அபயம் வரதம் முத்தி ரைகள் தாங்கிய இரண்டு கைகள்போக மற்றைய இரண்டு கரத்திலும் மாலையும் மலரும் தாங்கி அழ கொழுக நிற்கிருள். என்றைக்குமே அவள் அலங் காரம் பிரமாதம்தான். அதிலும் சோமவாரத்திலும் சுக்கிரவாரத்திலும் அவள் திருக்கோலம் பன் மடங்கு பல்கிப் பெருக அலங்கரித்து மகிழ்கின்றனர். சின்னஞ்சிறு பெண்ணுய், வழிபடும் அடியவர் துயர் துடைக்கத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் அன்னை யாய் அவள் காட்சி கொடுப்பாள் பக்தர்களுக்கெல் லாம். இப்படி எல்லாம் அருளாட்சி செய்து அன்பர் துயர் துடைக்கும் தேவியாக இருப்பதனுல்தான் கரும்பினிற் கட்டி போன்ற கடவூர் வீரட்டைனுரை விடவும் புகழ் பெற்றவளாக விளங்குகிருள். ஆம் இந்தக் காலத்தில் யார் நீண்டநாள் வாழவேண்டும் என்று விரும்புகின்ருர்கள். இருக்கின்ற நாட்களில் நோய் நொடியில்லாது, இன்னல் இடர் இல்லாமல் வாழ்வதைத்தானே விரும்புவார்கள். அதை அருளு பவள்தானே அன்னை அபிராமி.

# வேளூர் தையல் நாயகி

மனிதனுக்கு அடிக்கடி நோய்வருகிறது. நோய்க்குக் காரணம் என்ன என்ன என்று விவரமாக டாக்டர்கள் சொல்கிறுர்கள். ஆனுல் கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ் சொல்கிறுர், 'நம்முடைய குணங்களையும் ஆற்றலையும் நல்ல வழியில் வளர்க்கவே நோய் வருகிறது. அது ஆண்டவனுடைய அருள்' என்று. மேலும் சொல்லுகிறுர் 'நாம் சுகமாக வாழும்போது இறைவனைவிட்டு விலகி நிற்கிறேம். நாம் பெறுகின்ற சுகம் நாமே தேடிப் பெற்றது என்று எண்ணி இறுமாந்து விடுகிறேம். ஆனுல் நோய்வாய்ப்படுகின்ற போதுதான் கடவுள் ஒருவன் இருக்கிறுன் என்பது நினைவுக்கு வருகிறது' என்று. இதையே மிகவும் ரத்தினச் சுருக்கமாகச் சொன்னுர் ஞானசம்பந்தர், 'நோயுளார் வாய் உளான்' என்றுதானே அவர் கடவுளுக்கு இலக்கணம் சொல்கிறுர்.

ஆதலால் மனிதனுக்கு வருகிற நோய் அவன் அடைகிற துன்பம் எல்லாவற்றையும் தீர்க்க வல்ல வைத்தியனும் அவனுகவேதான் இருக்கவேண்டும் அல்லவா ? அவனை அதனுல் வைத்திய நாதன் என்று அழைப்பது எவ்வளவு பொருத்தம். இறைவனுக்கு எத்தனை எத்தனையோ திரு நாமங்கள். 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று இல்லார்க்கு ஆயிரம் திரு

நாமம் பாடி தெள்ளேனம் கொட்டத் தெரிந்தவன் தமிழன். ஆதலால் ஆபத்சகாயன், பக்தவத்சலன்; என்ருன்; மாசில்லாமணி, தியாகேசன் என்ருன். வழித்துணை தோன்ருத்துணை என்ருன். இப்படி எல்லாம் அழைப்பதோடு அவரை வைத்தியநாதன் என்று அழைப்பதுதான் எவ்வளவுபொருத்தமானது, அழகானது ?

இந்த வைத்தியநாதன் கோயில் கொண்டிருக்கும் தலம்தான் வைத்தீஸ்வரன் கோயில் என்னும் புள்ளிருக்கும் வேளூர். இங்கு இந்த ஆதி வைத்திய நாதன் கோயில் கொண்டிருப்பது ஒரு வேப்ப மரத்தடியிலே. இந்த மரத்திற்கே ஒரு சிறப்பு. இந்த மரம், அதன் பட்டை, அதன் பூ, இலை, பிஞ்சு, பழம், கொட்டை இவற்றிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் எல்லாமே நல்ல மருந்துகளாக உபயோக மாகின்றன என்பதை அறிவோம். இதையெல்லாம் விட காற்றையும் சுத்தமானதாகச் செய்யவும் இந்த மரத்திற்கு இயலும் என்று கண்டிருக்கிருர்கள் பெரியோர்கள். வேப்பமரம் முன் வாயிலில் இருக்கும் வீட்டிற்குள் காலராவோ அல்லது டைபாயிடோ நுழைவதில்லை என்றும் தெரிந்திருக்கிருர்கள். இப்படி நல்ல ஆரோக்கியத்தையே அருளும் அந்த வேப்ப மரத்தடியில் வைத்திய நாதனே இருந்து அருள்புரிய முனைந்து விட்டால், மக்களது தீராத நோயெல்லாம் தீர்க்கிறது என்பதில் வியப்பு என்ன ?

ஆனல் எனக்குத் தோன்றுகிறது, இந்த வைத்திய நாதனுக்கு இத்தகைய சக்தியைக் கொடுப்பது வெறும் வேம்பு மட்டுமல்ல. அவன் பக்கத்திலே இருக்கும் கரும்பன்ன செல்வியாகிய தையல் நாயகி

யும்தான். ஆம். இந்த வைத்தீஸ்வரன் கோயில் தலத்தில் இருக்கும் அம்பிகையின் பெயர் தையல் நாயகிதான். பெண்களை, அதிலும் நல்ல அழகும் குணமும் உள்ள பெண்களைத்தான் தையல் என்று அழைப்பது வழக்கம். அந்தத் தையல்களுக்கு எல்லாம் நாயகியாக வாழ்வதற்கு உரிய நிலை இந்தத் தையல் நாயகிக்கு வாய்த்திருக்கிறது.

தில்லைச் சிற்றம்பலத்திலே நடராஜர் நடனம் ஆடுகிறார். வானம் மணி முகடாய் மால்வரையே தூணாக ஆன பெரும் பார் அரங்காக வைத்துக் கொண்டு ஆடினாலும் அவன் நோக்கெல்லாம் அன்னை சிவகாமி பக்கமே இருக்கிறது. 'மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே ஆடுகின்றான் அவன்' என்பது தானே சேக்கிழார் சொல்லும் விளக்கம். ஆனால் சிவகாமியை நோக்கி நடராஜர் ஆடுகிறார் என்று சொல்வதைவிட, சிவகாமி தனது ஒரு கண்ணால் அந்த ஆனந்தக் கூத்தைக் கண்டு மற்றொரு கண்ணால் உயிர்களைக் காத்து அருள்புரிகின்றாள் என்று சொல்வது எவ்வளவு பொருத்தம். இறைவனது ஐந்து தொழிலையும் விளக்கும் இந்த அற்புத நடனம் மனிதனது பிறவிப் பிணிக்கு ஓர் அறிய மருந்து. ஒரு பச்சைப் பசுங்குழவிக்கு நோய் என்றால் அந்தக் குழந்தைக்கு மருந்து கொடுப்பதில்லை. அப் பாலுண் குழவி பசுங்குடல் பொறுது என நினைந்து, தாயே அந்த நோய்க்கு உரிய மருந்தை உண்டு அந்தக் குழந்தையின் நோய் தீர்ப்பது போல, அன்னை சிவ்காமியும் தன்னுடைய ஒரு கண்ணால் இறைவனது திரு நடனத்தின் குறிப்பை எல்லாம் வாங்கிப் பக்குவப் படுத்தி, மற்றொரு கண்ணால்

உயிர்களுக்கு எல்லாம் வழங்குகின்ருள் என்பது தானே இதற்குப் பொருள். இது போலவே டாக்டர் வைத்தியநாதன் மக்கள் பிணி தீர்க்க அருளும் மருந்தை எல்லாம் ஏதோ கம்பவுண்டர் போலக் கலக்கிக் கொடுப்பதோடு நில்லாமல் தானே உண்டு, அதன் மூலம் தன் மக்களாகிய உயிர்களை எல்லாம் கருணையோடு காக்கும் அன்னையைத் தையல் நாயகி என்று அழைக்காமல் வேறு என்ன பெயர் கொண்டு அழைப்பது. ஆதலால் திருக்கடைக் கண் கொழித்த பெருவெள்ளம் குடைவார் பிறவிப் பெரும் பிணிக்கு மருந்து அவளே என்று கொண்டு நம் பிணிகளை அகற்றக் கற்றுக் கொள்வோமானல் அதுவே போதும். ஆம். அதற்கு

கரும்புருவச் சிலையும் வரிக்கயல்விழியும்
வள்ளைவார் காதும் முல்லை
அரும்பு இளநகையும் செங்கனிவாயும்
பிறைநுதலும். அமுதவாக்கும்
பொருந்திய மங்கலநாணும் மலர்க்குழலும்
விளங்க எழிற் புள்ளூர் மேவும்
திருந்துமணம் கமழ் சாந்துக் கழுத்துமை
வாலாம்பிகைதாள் சிரமேற்கொண்டு
வாழ்த்தி வணங்கத் தெரிந்து கொள்ளலாம் தானே.



கஞ்சி காமாக்ஷி

## காஞ்சி காமாக்ஷி

கஞ்சி காமாக்ஷி, மதுரை மீனுக்ஷி, காசி விசாலாக்ஷி மூவரும் மும்மூர்த்திகளைவிட, பிரபலமானவர்கள். காரணம்: மூவரும் அவர் தம் அருள் நோக்காலேயே மக்களுக்கு வேண்டுவன எல்லாம் தர வல்லவர்கள். மதுரை மீனுக்ஷி, பாண்டியன் மகளாகப் பிறந்து மானுடப் பெண்ணுகவே வளர்ந்து அரசியாகவே அரியணை ஏறியவள். ஆகவே, அவளுக்கு இரண்டே கைகள். செண்டேந்திய திருக்கரம் ஒன்று, ஒயிலாகத் தொங்கவிடப்பட்ட கரம் ஒன்று. ஆனுல் அன்னை காமாக்ஷிக்கோ கரங்கள் நான்கு அவள் தன் தெய்வத் தன்மையை விளக்க. சாதாரணமாகக் கோயில்களில் உள்ள அம்பிகைகளுக்கு நான்கு கைகளிருந்தால், அவற்றில் ஒன்று வரத முத்திரையோடும், ஒன்று அபய முத்திரையோடும் அமைந்திருக்கும். ஆம், அபயம் அருளுவதோடு வாரி வழங்கும் வரதம் அருளுபவளாக அவள் திருஅருள் அமைந்திருக்கும். ஆனுல் கஞ்சி காமாக்ஷிக்கோ கரங்கள் நான்கிருந்தும் அதில் வரதமும் காணேம்; அபயமும் காணேம். அவளோ பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஈஸ்வரன், சதாசிவன் முதலான பஞ்ச பிரம்மாக்களையே தனக்காசனமாகக் கொண்டு அவ்வாசனத்தில் பத்மாசனமிட்டு உட்கார்ந்திருக்கிருள். நான்கு கைகளிலும்

பாசம், அங்குசம், புஷ்பபாணம், கரும்புவில் முதலியவற்றைத் தாங்கியிருக்கிருள். ஆம், அருள்புரிவதெல்லாம் மீனுக்ஷியைப் போலக் கண்களின் மூலமாகத்தான். வேண்டுவார் வேண்டுவன எல்லாம் அருளும் காமாக்ஷி அல்லவா அவள் ? திருநேத்திரத்துடன் காமேஸ்வரி, காமேஸ்வரர்களின் சமஷ்டி வடிவத்துடன் லலிதை, ராஜேஸ்வரி, திரிபுரை, காமாக்ஷி ஸ்ரீ சக்ர நாயகி என்னும் பல திருநாமங்கள் பெற்று விளங்குகின்ருள். காஞ்சியில் இவள் அவதரிக்கக் காரணமாக இருந்தவர்கள் பந்தகாசுரன், பண்டாசுரன் என்பவர்களே. இவர்கள் செய்யும் இடுக்கண்களினின்றும் விடுதலைபெற தேவர்கள் தேவியிடம் முறையிடுகிருர்கள். தேவியோ காஞ்சியில் செண்பக மரத்தில் கிளி வடிவத்துடன் வாசம் செய்ய வருகிருள். அப்படி வந்தவள் அங்குள்ள ஒரு பிலாகாசத்திலிருந்து தோன்றி துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்கிருள். ஆகவே அன்னை காமாக்ஷி பிலாகாசத்திலிருந்து சுயம்புவாகவே ஆவிர்ப்பவித்தவள் என்று சொல்கிறது தல வரலாறு.

இங்கு அம்பிகை மூன்று வடிவத்தில் இருக்கிருள். ஸ்தூல வடிவத்தில் இருப்பவளைத்தான் காமாக்ஷி என்கிருேம். தன்னுடைய அடியார்களுக்குத் தன் கடைக் கண் நோக்காலேயே அவர்கள் விரும்பும் சர்வகாமங்களையும் கோடி கோடியாகத் தந்தருளுகிருள். சூக்கும வடிவத்திலேஅவள் ஸ்ரீ சக்ரமாக விளங்குகிருள். வட்ட வடிவமாக அம்பிகையின் எதிரில் அமைந்துள்ள ஒரு சக்கரமே காமகோடி பீடம் எனப் பெயர் பெறுகிறது. இந்தப் பீடம்

பல மகான்களால் பூஜிக்கப்பட்டு அம்பிகையின் சாந்நித்யம் முழுவதையும் பெற்றிருக்கிறது. காரண வடிவமாக இருக்கும் பிலாகாசமான குகைதான் அம்பிகையின் வாசஸ்தலம். அங்குதான் தேவியின் ஆன்ம சக்தி, நிறைந்த சாந்நியத்துடன் விளங்கு கிறது.

இவற்றைத் தவிர்த்துத் தவக் கோலத்துடன் காமாக்ஷியும் அங்கு கர்ப்பக் கிரகத்திலேயே கோயில் கொண்டிருக்கிருள். அன்னை பார்வதிக்கும் ஒரு காலத்தில் முனிவர்களது சாபம் ஏற்பட்டு விடு கிறது. அச்சாப விமோசனம் பெற அவள் காசியில் பன்னிரண்டு வருஷம் தவம் செய்கிருள். அங்குள்ள வர்களின் பசியை எல்லாம் அகற்றி அன்னபூரணி என்ற பெயர் பெறுகிருள். அப்படியும் சாப விமோ சனம்பெற முடியாமல் காசியிலும் சிறந்த காஞ்சிக்கு வந்து காமகோடி பீடத்தை அடைந்து அங்கு ஏகாம்பரமாக விளங்கும் மாமரத்தடியில் தவம் புரிகிருள்; அறம் வளர்க்கிருள்.

எண்ணரும் பெருவரங் கள்முன்
பெற்று, அங்கு எம்பிராட்டி
தம்பிரான் மகிழ்ந்தருள
மண்ணில்மேல் வழிபாடு
செய்தருளி, மனையறம்
பெருக்கும் கருணையினுல்
நண்ணு மண்ணுயிர் யாவையும்
பல்கு நாடு காதலின்
நீடிய வாழ்க்கை

புண்ணியத் திரு காமக் கோட்டத்து
பொலிய முப்ப தோடு
இரண்டு அறம் பெருக்கும்

பான்மை பாரட்டப் படுகிறது. இப்படி அறம் வளர்த்த மாமரத்தடியில் மணலினுல் லிங்கம் செய்து அமைத்து பூஜைசெய்து வரும்பொழுதுதான், பரம சிவன் காமாக்ஷியின் தவத்தைக்கண்டு மகிழ்ந்து, அந்த மரவடியிலேயே காக்ஷி தந்து ஆட்கொள் கிருர். இவ்வாறு அவளும் இறைவனைக் கூடித் தழுவிப் பெரும் பேறு பெறுகிருள்.

அருட்தவத்தாள் ஆயிழையாள்
உமையாள் பாகம்
அமர்ந்தவள் காண்

என்று அப்பர் பாடுவது இந்த அம்மையையும் அப்பனையும் நினைந்தே.

இருவரும் இரண்டற அந்த மாமரத்திலேயே கலந்தனர் என்பதை விளக்கத்தான், காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலிலே மாவடிக் கோயில் ஏற்பட்டிருக்கிறது. நான்கு வேதங்களுமே அந்த மாமரமாக அமைந்திருக்கிறது என்பதனுல் அந்த மாமரத்தின் கனிகளும் நான்கு சுவையுடையதாக இருக்கின்றன. அக்கனிகளை அருந்தினுல் புத்திரப் பேறு சித்திக்கும் என்பது மக்கள் நம்பிக்கை.

இந்தக் காமாக்ஷி அம்மையைச் சுற்றித்தான் எத்தனை எத்தனை அம்பிகைகள். அரூப லக்ஷிமி எனப்படும் அஞ்சன காமாக்ஷி இடப்புறத்தில் வடக்கு நோக்கித் தவம் புரிகிருள். மகாலக்ஷிமிக்கு

தான் மிகவும் அழகுடையவள் என்று கர்வம். அதனால் ஒரு நாள் தன் நாயகனை மகாவிஷ்ணுவின் அழகையே பரிகசிக்கிறாள். அதனால் அவர் சாப மிடுகிறார். அந்தச் சாபம் நீங்க காம கோட்டத்தை அடைந்து, ஸ்ரீதேவியை நோக்கித் தவம் புரிகிறாள். காமாக்ஷியின் குங்கும நிர்மால்ய பிரசாத ஸ்பரிசத்தால் தன் சுய ரூபம் பெறுகிறாள் பின்னர் என்பது கதை. ஆம். எதிர்ப் பக்கத்தில் இப்படித் தவத்தால் பூரண செளந்தரியத்தைப் பெற்ற செளந்தர்ய லக்ஷிமியும், அவள் செளந்தரியம் பெற்றதைக் கண்டு அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல வந்திருக்கும் கள்ளப் பெருமானுமே எழுந்தருளி யிருக்கின்றனர்.

இன்னும் வராஹி, அர்த்தநாரி, அன்னபூரணி. ராஜ சியாமளா என்னும் அஷ்டபுஜங்களோடு கூடிய சரஸ்வதி எல்லோருமே இங்கு இந்தக் காமாக்ஷியின் சந்நிதிக்கு வந்து சேர்ந்து விடுகிறார் கள். சக்தி அம்சம் அத்தனையையும் ஒருங்கே காண இந்த ஒரு கோயிலே போதும். மக்கள் விரும்பியவற்றை எல்லாம் கொடுப்பவளும், மக்களை வசீகரிக்கும் ஆற்றல் நிறைந்த அருள் விழிகளைப் பெற்றவளுமாகக் காமாக்ஷி விளங்குகின்றாள். அலை மகள், கலைமகள், மலைமகள் மூவரும் சேர்ந்த பராசக்தியின் அம்சமாகவே அன்னை காமாக்ஷி இலங்குகின்றாள் என்றால் அது மிகையன்று.

இதுவரை சொன்னதெல்லாம் மூலமூர்த்தியாம் காமாக்ஷியைப் பற்றியே. இங்குள்ள புராதனமான உத்சவ மூர்த்தி தனித் தங்கத்தால் ஆனவள்.

ஆகவே அவள் பங்காரு காமாக்ஷி எனப் பெயர் பெற்றிருந்தாள். அந்தச் சொர்ண காமாக்ஷியை மைசூரிலிருந்து ஆண்ட ஹைதர்அலி கைப்பற்றிச் செல்ல பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசியிலே முயன்றிருக்கின்றான். தஞ்சையிலிருந்த நாயக்க மன்னர்கள் இந்தப் பங்காரு காமாக்ஷியைப் பத்திர மாகத் தஞ்சைக்கே எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கு இன்னும் கோயில் கொண்டிருக்கிறாள் இந்த அழகான தங்கக் காமாக்ஷி. இந்தக் காமாக்ஷியின் ஞாபகார்த்தமாகவே காமகோடிபீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் 1941-ஆம் வருஷம், பங்காரு காமாக்ஷி யின் பாதங்களை மட்டும் உருவாக்கிப் பிரதிஷ்டை செய்திருக்கிறார். ஆம், 'பாதங்கள் இவை எனில் படிவங்கள் எப்படியோ?' என்று கற்பனைக் செய்யத் தெரிந்தவன்தானே தமிழ் நாட்டுப் பக்தன்.



காசி விசாலாக்ஷி

# காசி விசாலாக்ஷி

கைலையைக் காண ஆசைப்பட்டார் அப்பர். அதுவும் இந்தப் பூத உடலோடேயே. ஆனால் அவருக்கு அந்தத் தள்ளாத வயதிலே அத்தனை தூரம் நடந்து சென்று கைலையைக் காண இயலவில்லை. அதற்காக ஏங்கினார். ஒருநாள் அவரது கனவில் கைலாசபதியே எழுந்தருளி 'கைலையைக் காண நீ நீண்ட தூரம் நடக்க வேண்டியதில்லை. நீ தங்கியிருக்கும் திருவையாற்றிலே உள்ள கோயில் திருக்குளத்திலேயே மூழ்கினால் கைலையைக் காணலாம்' என்று சொல்லிவிட்டு மறைகிறார். விடிந்ததும் அடியார்கள் புடைசூழ, அப்பர் ஐயாறப்பனும், அறம் வளர்த்தாளும் கோயில் கொண்டிருக்கும் அந்தக் கோயிலுக்குள்ளேயே நுழைந்து அங்குள்ள திருக்குளத்தில் முழுகுகிறார். அப்படி முழுகி எழுந்த போது கைலையை நேரிலேயே காண்கிறார். அவர் கைலை சேர்ந்து கைலாசநாதனை அந்த லோகநாயகியுடன் கண்டு தொழுது பாடுகிறார் :

மாதர் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடி
போதொடுநீர் சுமந்து ஏத்தி
புகுவார் அவர்பின் புகுவேன்

யாதும் சுவடு படாமல்
ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டு அறியாதன கண்டேன்.

என்று கூத்தாடவே ஆரம்பித்து விடுகிறார். ஆம், கைலையை, அங்குள்ள பெருமானையும் பெருமாட்டியையும் தெருவிலே வருகிற களிறிலே பிடியிலே, ஆடி வருகிற மயிலிலே பெடையிலே எல்லாம் கண்டு கண்டு மகிழ்கிறார். ஆம், சிவனும் சக்தியும் ஒன்றி நிற்கின்ற அந்த மாதிருக்கும் பாதியனையே அல்லவா கண்டு விடுகிறார். இப்படி அப்பர் கண்ட கைலாச தரிசனம் ஞாபகார்த்தமாக ஐயாறப்பன் கோயிலுக்குள்ளே ஒரு சிறு கோயில் கைலாச நாதருக்கு.

இதைப் போலவே, அந்தக் காசி விஸ்வநாதரும் விசாலாக்ஷியும், தமிழ் நாட்டுக் கோயில்களுக்குள் கோயில் தவறாமல் எழுந்தருளியிருக்கிறார்கள். இப்படி இவர்கள் தலம் தலமாக வந்து குடியேறுவானேன். விஷயம் இதுதான். நமது தமிழர்களுக்கு ஓர் ஆசை. இறப்பதற்கு முன் காசி சென்று கங்கையில் மூழ்கி, விசுவநாதரை – விசாலாக்ஷியைத் தரிசனம் செய்துவிட வேண்டும் என்று. ஏன்? அந்தக் காசியிலே இறந்தால் முத்தி நிச்சயம் என்பது நம்பிக்கை. ஆனால் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்ற, காலம், பொருளாதாரம், உடல் நலம் எல்லாம் இடந்தராமல் எத்தனையோ பேருக்கு காசி

செல்ல முடிகிறதில்லை. ஆதலால் அவர்கள், அந்த ஆசை நிறைவேற அவரவர்கள் இருக்கும் ஊரிலே உள்ள சிவன் கோயிலிலேயே, விசுவநாதரையும் விசாலாக்ஷியையும் பிரதிஷ்டைபண்ணி வணங்கி தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இமைப் பொழுதும் நெஞ்சைவிட்டு நீங்காத இறைவனை, கோயிலில் வைத்து கும்பிட விரும்பும் பக்தர்களுக்கு, விசுவநாதன் காசியிலிருந்து விசாலாக்ஷியையும் அழைத்துக்கொண்டே வந்துவிடுகிறான். இல்லை. காசிக்கே சென்றால் அங்குள்ள இறைவனை அணுகி, நாமே நேரிலே அபிஷேகம் செய்து, மலரால் அருச்சித்து வழிபாடு செய்யலாம். சில தலங்களில் அர்ச்சகர்களாலும் தீண்டாத் திருமேனியோடு விளங்கும் இறைவன், இங்கு எல்லோராலும் தீண்டும் திருமேனியோடு விளங்குகிறான் என்றால் எவ்வளவு எளியவனாக அவன் பக்தர்களுக்காக இறங்குகிறான் என்று தெரிந்து கொள்ளலாம் அல்லவா.

இப்படி 'எம்மானாக, எளிவந்த பிரானாக' எல்லாம் விளங்கும் காசி விசுவநாதனோடு கோயில் கொண்டிருப்பவளே விசாலாக்ஷி. கஞ்சி காமாக்ஷியுடனும், மதுரை மீனாக்ஷியுடனும் ஒருங்கு வைத்து எண்ணப்படுகிறவள். மீனாக்ஷி விழித்த கண் விழித்தபடியே இருந்து அருள் புரிகிறவள் என்றால், இவள் கண்களை அகலத் திறந்து விரிந்த அருளையே அன்பர்களுக்குக் கொடுக்க வல்லவள் ஆகிறாள். ஆனால் காசியில் உள்ளவர்கள் இவளை விசாலாக்ஷி என்று வணங்குவதில்லை. அன்னை அன்னபூரணி என்றே தொழுகிறார்கள். உண்மைதானே. மக்கள் பசிப்பிணி அகற்

றுவதுதானே அன்னையின் கடமை. 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற உண்மைக்கு நிதரிசனமாக, பத்து மாதம் தன் வயிற்றில் சுமந்து, தன் இரத்தத்தாலேயே வளர்த்து, பின் பெற்றெடுத்து, தன் முலைப்பாலால் அமுதூட்டி அதன் பின், உண்ண உணவை எல்லாம் அருளும் அன்னையை அன்னபூரணி என்று சொல்லுவதில்தான் எவ்வளவு பொருத்தம்.

குமரிக் கரையில் கன்னியாக நின்று மக்கள் நலனுக்காகத் தவஞ்செய்கிருள் ஓர் அன்னை. அவளைப் போலவே மக்களை எல்லாம் ஊட்டி வளர்த்து ஆளாக்குகிருள் ஓர் அன்னை, அந்த தொலை தூரத்திலுள்ள காசியிலே. இந்த இரண்டு அன்னையாருக்கும் இடையிலேதான் மற்றவர்கள் எல்லாம். உலகம் புரக்கும் தேவியாக விளங்குகிருர்கள். இத்தனை அன்னையரையும்பற்றிச் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிட முடியவில்லைதான். பரவாயில்லை. இந்த அளவிற்காகவாவது தெரிந்து கொண்டு அவர்களை வணங்கலாம்தானே.



அன்னபூரணி — தாராசுரம்

# ராஜராஜேஸ்வரி அஷ்டகம்

அம்பா ஸாம்ப்பவி சந்திரமௌளி ரபலா
பூர்ணு உமா பார்வதீ
காளீ ஹேமவதி சிவா த்ரிநயனு
காத்யாயநீ பைரவீ !
ஸாவித்ரீ நவயௌவனு ஸுபகரீ
ஸாம்ராஜ்ய லக்ஷ்மீப்ரதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீ ! 1

அம்பா மோஹினி தேவதா த்ரிபுவனீ
ஆனந்த ஸந்தாயினீ
வாணீ பல்லவபாணி வேணு முரளீ
கானப்ரியா லோலினீ !
கல்யாணீ உடுராஜ பிம்பவதனு
தூம்ராக்ஷ ஸம்ஹாரிணீ
சித்ரூபீ பரதேவதா பகவதீ
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீ ! 2

அம்பா நூபுர ரத்ன கங்கணதரீ
கேயூர ஹாராவளீ
ஜாதீசம்பக வைஜயந்தி லஹரீ
க்ரைவேயுகை ரஞ்ஜிதா
வீணுவேணு விநோத மண்டிதகரா
வீராஸனு ஸம்ஸத்திதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீ. 3

அம்பா ரௌத்ரிணி பத்ரகாளி பகளா
ஜ்வாலாமுகீ வைஷ்ணவீ
ப்ரஹ்மாணீ த்ரிபுராந்தகீ ஸுரநுதா
தேதிப்ய மாநோஜ்வலா
சாமுண்டேஸ்வரி ரக்ஷபோஷ ஜனனீ
தாக்ஷாயணீ வல்லப
சித்ரூபீ பரதேவதா பகவதீ
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீ ! 4

அம்பா ஸ௱லதனுஃ குஸாங்குஸதரீ
அர்த்தேந்து பிம்பாதரீ
வாராஹீ மதுகைடப ப்ரஸமனீ
வாணீ ரமா ஸேவிதா
மல்லாத்யாஸுர மூகதைத்ய மதனீ
மாகேஸ்வரீ அம்பிகா
சித்ரூபீ பரதேவதா பகவதீ
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீ 5

அம்பா ஸ்ருஷ்டி விநாஸ பாலனகரீ
ஆர்யா விஸம் ஸோபிதா
காயத்ரீ ப்ரணவாக்ஷரா ம்ருதரஸஃ
பூர்ணானுஸந்தீ க்ருதா
ஓங்காரீ வினுதா மரார்ச்சிதபதா
உத்தண்ட தைத்யாபஹா
சித்ரூபீ பரதேவதா பகவதீ
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீ 6

அம்பா ஸாஸ்வத ஆகமாதி வினுதா
ஆர்யா மஹா தேவதா
யா ப்ரஹமாதி பிபீலிகாந்த ஜனனீ
யாவை ஜகன் மோஹினீ
பா பஞ்ச ப்ரணவாதிரேப ஜனனீ
யா சித்களா மாலினீ
சித்ரூபீ பரதேவதா பகவதீ
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீ ! 7

அம்பா பாலித பக்தராஜ ரசிதம்
அம்பாஷ்டகம் யஃபடேத்
அம்பா லோக கடாக்ஷ வீக்ஷலலிதா
விஸ்வாதி ரவ்யாஹதா
அம்பா பாவன மந்த்ர ராஜபடனா
தந்தேஸ மோக்ஷப்ரதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ
ஸ்ரீராஜ ராஜேஸ்வரீ ! 8

145